வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 16.11.2023 வியாழக்கிழமை | இதழ் : 340 | பக்கங்கள் : 16

# நெருக்கடிக்கு ரணில் தீர்வை வழங்கவில்லை!

## பட்ஜெட்டை தோற்கடிக்க எதிர்க்கட்சிகளுக்கு அரிய சந்தர்ப்பம் என்கிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, நவம்பர் 16

**ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டம் நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான தீர்வுகள் இல்லாத வரவு - செலவுத் திட்டம் என்பது தெளிவாகத் தெரிகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஆனால், வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்கும் பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி அதனை செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

"எதிர்க்கட்சிகள் வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்க சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்தாலோசிக்காமல் வரவு - செலவுத் திட்டத்தை விமர்சிப்பதில் **11**



## நெடுந்தீவில் நூற்றுக்கணக்கான துப்பாக்கி ரவைகள் நேற்று மீட்பு!

யாழ்ப்பாணம். நவ. 16

யாழ்ப்பாணம் - நெடுந்தீவு பகுதியில் தரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 750ற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நெடுந்தீவு கிழக்கு 15ஆம் வட்டாரம் பகுதியில் மக்கள் நடமாற்றம் இல்லாத தனியார் காணியில் குறித்த துப்பாக்கி ரவைகள் மறைத்து **11**

## பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு சீனி சிக்கியது!

கொழும்பு, நவ. 16

அதிகவிலையில் விற்பதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு தொகை சீனியை நுகர்வோர் விவகார அதிகாரசபை கைப்பற்றியுள்ளது.

அண்மையில் இறக்குமதி செய்யப்படும் ஒரு **11**

## கோப் குழு தலைவரின் நடவடிக்கைகள் உடனடி விசாரணை நடத்தப்படவேண்டும்

### சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, நவ. 16

கோப் எனப்படும் அரசாங்க பொறுப்பு, முயற்சி பற்றிய குழுவின் தலைவரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறிலங்கா கிரிக்கெட் நிறுவன அதிகாரிகளுடனான சந்திப்பின்போது, அந்த நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு, தகவல்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு கோப் குழு தலைவர் மறைமுகமாக சமிக்ஞை செய்யும் காணொளிக் காட்சிகள் வெளியாகியுள்ளதாக பாராளுமன்றத்தில் உரை யாற்றிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு சபாநாயகரிடம் **11**

## 2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இலக்கை அடைவது சவாலானது!

கொழும்பு, நவ. 16

2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட இலக்குகளை அடைவதில் அபாய நிலைமை காணப்படுவதாக பிட்ச் ரேட்டிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

வரவு செலவுத் திட்டம் குறித்த தமது நிலைப்பாட்டை விளக்கும் வகையில் பிட்ச் ரேட்டிங் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய தரவுகளுக்கு அமைய, மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.1 வீதமாக இருக்கும் என கணிப்பிடப்பட்டுள்ளதாகவும், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதனை விட அதிகமாக இருக்கலாம் எனவும் பிட்ச் ரேட்டிங் நிறுவனம் சுட்டிக் **11**

## விலங்குகள் வாழ்வதற்கும் பொருத்தமற்ற நாடு இது!

### அநுரகுமார எச்சரிக்கை

கொழும்பு, நவ. 16

இலங்கை மனிதர்களுக்கு மாத்திரமன்றி விலங்குகளுக்கும் வாழ முடியாத நாடாக ஆட்சியாளர்கள் மாற்றியுள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். **11**

## தகுதியற்ற எம்.பிக்களை பதவி நீக்க புதிய சட்டம்

### விஜேதாஸ ராஜபக்ஷ அறிவிப்பு

கொழும்பு, நவ. 16

உத்தேச பாராளுமன்ற தரநிலை சட்டமூலம் நடைமுறைக்கு வந்தப் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு தகுதியற்றவர்களை நீக்க முடியும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். **11**



## பாடசாலையின் சுவர் இடிந்துவிழுந்து விபத்து

### மாணவி ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 16

வெல்லம்பிட்டி - வேரகொட கனிஷ்ட பாடசாலையின் சுவர் இடிந்து விழுந்ததில் மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாடசாலையின் நீர் குழாய்கள் பொருத்தப்பட்டுள்ள சுவர் இவ்வாறு இடிந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. **11**

## மருத்துவர்கள் வெளியேற்றத்தை தடுக்கமுடியாமல் போனமை ஏன்?

### தயாசிறி சபையில் கேள்வி

கொழும்பு, நவ. 16

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பதவி நீக்கம் செய்யப்பட்டு தற்போது வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளமையானது மிகவும் ஆபத்தானது என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கருத்துரைக்கையிலே தயாசிறி ஜயசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், வைத்தியர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ள நிலையில், **11**

# இப்படியும் நடக்கிறது

இரண்டாவது தடவையாக மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியில் இருந்த காலத்தில், அவரது ஆட்சி முடிவடைய இரண்டு ஆண்டுகள் இருந்தபோதே தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார்.

அவரது செல்வாக்கு இறங்குமுகமாக இருந்தபோது, தொடர்ந்து மிகுதி இருந்த இரண்டு ஆண்டுகளும் ஆட்சியில் இருந்தால் தனது செல்வாக்கு மேலும் குறையலாம் என்று கணக்குப்போட்ட மகிந்த, முன்கூட்டியே தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார்.

அவ்வாறு அவர் அழைப்பு விடுத்தபோதிலும், தான் வெற்றி பெற்றதும் தனது பழைய பதவிக் காலம் முடியும்வரை தொடர்ந்துவிட்டு அதன்பின்னரே புதிய பதவிக் காலத்திற்காக பதவிப்பிரமாணம் செய்யலாம் என்றும், அதாவது இரண்டு ஆண்டுகள் முன்னதாக தேர்தல் நடத்தினாலும் பதவியேற்பை தள்ளிப்போடுவதன்மூலம் அந்த இரண்டு ஆண்டையும் சேர்த்து புதிய ஆட்சிக் காலத்தையும் சேர்த்து ஆட்சியில் இருக்கலாம் என்பது அவரது கணிப்பு.

ஆனால், அவர் அவ்வாறு முன்கூட்டியே தேர்தலுக்கு போகும் முடிவை எடுத்ததற்கு பின்னால் அவரது ஆஸ்தான சோதிடரே இருந்தார் என்றும் அப்போது கூறப்பட்டது.

அதனால்தான் அந்த சோதிடரை அப்படிக் கூறவைத்து தேர்தலை முன்கூட்டியே நடத்தி மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் இரண்டு ஆண்டுகளைக் குறைக்க மேற்குலகம் சதி செய்ததாக பின்னர் கூறப்பட்டது.

மகிந்தர் தேர்தலை முன்கூட்டியே நடத்தாமல் விட்டிருந்தால் கூட, அவர் பதினைந்தில் வீடு போகவேண்டிய நிலைமை வந்திருக்காது. அதாவது அவர் பதினேழு வரை ஆட்சியில் இருந்திருப்பார்.

இப்போது திடீரென்று விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் சேனநாயக்க தனி ஆவர்த்தனம் செய்துவருவது அரசியலை மத்திரம் அன்றி சிறிலங்கா கிரிக்கெட் டையும் அண்மைக்காலமாக பேசுபொருள் ஆக்கியிருக்கின்றது. இந்த விவகாரம் குறித்து முன்னரும் இந்தப் பத்தியில் பார்த்திருந்தோம்.

சிறிலங்கா கிரிக்கெட்டில் நிலவும் ஊழல் என்பது இன்று நேற்று நடந்ததல்ல. அந்த நிறுவனம் தொடர்ச்சியாக சூதாட்டக்காரர்களின் கைகளிலேயே இருந்துவருகின்றது. இலங்கையில் மிகப்பெரிய குதிரைப்பந்தய சூதாட்ட வலையமைப்பை நடத்திவரும் திலங்க சுமதிபாலவின் கைகளில் சிலகாலம் இருந்தது. அதேபோல மற்றுமெரு சூதாட்டக்காரரான தர்மதாசாவின் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இப்போது ஷம்மி சில்வா என்ற மற்றுமொரு சூதாட்டக்காரரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கிரிக்கெட் என்றதும் சூதாட்டமே நமக்கு நினைவுக்கு வரும். அப்படி கிரிக்கெட் சூதாட்டத்தில் சிக்கி அவ்வப்போது பல விளையாட்டு வீரர்கள் வெளிச்சத்துக்கு வந்தனர். அதாவது அங்கொருவர் இங்கொருவராக சூதாட்ட புகாரில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். ஆனால் முதல்தடவையாக முழு அணியுமே அவ்வாறு புகாரைச் சந்தித்திருப்பது சிறிலங்கா அணி மாத்திரமே. சிறிலங்கா கிரிக்கெட் டைப் பொறுத்தவரை அது ஊழ லில் இருந்து மீண்டுவரவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறு பாடு இருக்காது. ஆனால் அதற்காக விளையாட்டு அமைச்சர் எடுத்த நடவடிக்கைதான் விளையாட்டுத்தனமாக மாறியிருக்கிறது. அவர் கிரிக்கெட்டை புனரமைப்பதற்காக தன்னிச்சையாக முடிவெடுத்ததும், அதற்காக அர்ஜூன ரணதுங்கவை தலைவராக்கொண்ட குழுவை நியமித்ததும்தான் பிரச்னைக்கு காரணமானது. அவர் செய்ய நினைத்தது சரியானது என்றாலும் அவர் அதற்காக ஜனாதிபதியுடனோ அல்லது அமைச்சரவையிலோ ஆலோசனை செய்யாமல் தன்னிச்சையாக செய்தது சரியா என்றே பலரும் இப்போது கேள்வி எழுப்பியுள்ளனர். அது போதாதென்று அவர் தற்போதைய நிர்வாகத்திற்கு ஆதரவாக ஜனாதிபதி செயலகத்தில் உள்ள சிலர் செயற்படுவதாக பகிரங்கமாக குற்றம் சுமத்தியதும் இப்போது விமர்சிக்கப்படுகின்றது.

சிறிலங்கா கிரிக்கெட் மாத்திரமல்லாது முழு ஆசியாவிலும் உள்ள கிரிக்கட் சபைகள் இப்போது பலத்த விமர்சனத்திற்கு உள்ளாகிவருகின்றன. ஆசிய கிரிக்கெட் சபையின் தலைவராக இருக்கும் ஜெய் ஷா என்ற நபரே இந்த விமர்சனங்களில் முக்கிய இடத்தைப்பெற்று வருகிறார். இந்தியாவில் பிரதமர் மோடிக்கு அடுத்த நிலையில் இருப்பவர் அமித் ஷா என்பது முழு உலகிற்கும் தெரிந்ததுதான். அந்த அமித் ஷாவின் புதல்வரான ஜெய் ஷா, ஆசிய கிரிக்கட்டை கட்டுப்படுத்தி வைத்திருப்பதும், கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடும் பல நிறுவனங்களின் பின்னால் அவர் இருப்பதாக கூறப்படுவதுமே பல கேள்விகளை எழுப்பினாலும், நமது விளையாட்டுத் துறை அமைச்சர் இந்த விடயத்தில் ஏன் தனி ஆவர்த்தனம் ஆடுகிறார் என்பதை அறிய சில தெற்கின் ஊடகர்களுடன் பேசியபோதுதான் அவருக்கு நெருக்கமான வட்டாரங்களின் தகவல்களை அறியமுடிந்தது.

அண்மையில் அவர் தனது ஆஸ்தான சோதிடரைச் சந்தித்தபோது எதிர்காலத்தில் நாட்டின் தலைவராக வருவதற்கு அவருக்கு, அவரது சோதிட பலன்கள் அனுகூலமாக இருப்பதாக கூறியிருக்கிறாராம்.

அந்த சோதிடரின் கூற்றை நம்பிக்கொண்டுதான் அவர் அந்த தனி ஆவர்த்தனம் ஆடுகிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.!

மகிந்தர் சோதிடத்தை நம்பி தனது பதவிக்காலத்தில் இரண்டை இழந்ததுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வரவு - செலவுத் திட்டம் ஆட்சியாளர்களுக்கு தெய்வீக உலகத்தையும் மக்களுக்கு நரகத்தையும் காட்டியுள்ளமை அதனைக் கேள்விப்பட்டபோது ஞாபகத்திற்கு வந்தது.!

**-ஊர்க்குருவி.**

# கொழும்பு - யாழ்ப்பாண சொகுசு பேருந்தில் யாழ். பெண்ணிடம் பணம் திருடிய கும்பல்!

கொழும்பு, நவ. 16

சொகுசு பேருந்துகளில் பயணம் செய்பவர்களை இலக்கு வைத்து திருடர்கள் தமது கைவரிசைகளை காட்டி வருகின்றனர். அந்த வைகையில் கடந்த 02ஆம் திகதி இரவு பலாலியிலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த சொகுசு பேரூந்தில் ஒரு குடும்பம் முற்பதிவு மேற்கொண்டு கொழும்புக்கு பயணத்தை மேற்கொண்டிருந்தது

பேரூந்து புத்தளம் பகுதியை வந்தடைந்த பொழுது 4 பெண்கள் 2 ஆண்களுமாக 6 பேர் பேரூந்தில் பயணிகள் போர்வையில் ஏறியிருந்தனர்

இதேவேளை, கோண்டாவில் பகுதியிலிருந்து ஏறிக்கொண்ட ஒரு குடும்பத்தின் 1 லட்சம் ரூபாய் ரொக்க பணம் மேற்கூறிய ஆறு பேர்கொண்ட குழுவினால் கொழும்பு ஆமர் வீதி பகுதியில் பேரூந்தில் வைத்து களவாடப்பட்டிருந்தது

மேற்கூறிய பணத்தை களவாடியவர்கள் ஐந்து லாம்பு சந்தியில் இறங்கிக் கொண்டதாக பேரூந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் தெரிவித்திருந்தனர்.

பணத்தினை இழந்த குறித்த குடும்பத்தினர் கொழும்பு ஆமர் வீதி பகுதியில் இறங்க முற்படும் போதே குறித்த கும்பலில் பெண் ஒருவர் பேரூந்தில் பொருத்தப்பட்டிருந்த இரகசிய கமெராவினை தனது கைப்பையினால் மறைக்கும் போது மற்றைய பெண் கோண்டாவில் பகுதியிலிருந்து ஏறிய பெண்ணின் கைப்பையினுள் பணத்தினை திருடும் காட்சிகள் இரகசிய கண்காணிப்பு கமராவினுள் பதிவாகியுள்ளது.

இதேவேளை குறித்த யாழ். குடும்பத்தினருக்கு பேருந்து நடத்துநர் பணம் களவாடப்படும் முன்பே எச்சரிக்கை ஒன்றையும் விடுத்திருந்ததாக பணத்தினை இழந்த குடும்பத்தினர் தெரிவித்திருந்தனர்.

பணத்தினை களவாடியவர்கள் முற்பதிவு செய்தே குறித்த பேருந்தில் பயணித்திருந்ததாகவும் , அவர்கள் முற்பதிவு செய்ய அழைத்த தொலைபேசி இலக்கத்தையும் பணத்தை இழந்தவர்களிடம் பேரூந்து நடத்துனர்களினால் வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் ரகசிய கண்காணிப்பு கமரா மூலம் பெறப்பட்ட காணொலிகள் மற்றும் கிடைக்கப்பெற்ற தொலைபேசி எண் என்பனவற்றை வைத்து கொழும்பு கொட்டகேனா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# கிரிக்கெட் வீரர்களுக்கு தவறான ஊசி மருந்துகளே வழங்கப்பட்டன

## தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 16

இலங்கை கிரிக்கெட் அணியின் வைத்தியர் ஒருவர் வழங்கிய மருந்தினால்தான், இலங்கை அணியின் வீரர்கள் உபாதைக்கு உள்ளாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோப் குழுவில் கருத்து வெளியிட்டிருந்தார்.

வைத்தியரால் செலுத்தப்பட்ட ஊசிகளினால் வீரர்களின் பாதங்களில் பல்வேறு பிரச்னைகள் தோன்றியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

குறித்த அந்த வைத்தியர் தொழில்முறை விளையாட்டு வைத்தியர் அல்ல என்பதையும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கோப் குழுவில் வெளிப்படுத்தினார்.

இதன்போது வீண் செலவு செய்வதை நிறுத்துமாறும், வெளிநாட்டுப் பயணங்களுக்கு ஊடகவியலாளர்களை அழைத்துச் செல்வதில் வெளிப்படைத் தன்மையைப் பேணுமாறும் இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகளுக்கு கோப் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.

அதேநேரம், மேலும் 3 நாட்களுக்கு இலங்கை கிரிக்கெட் சபையின் அதிகாரிகளை அழைக்கவும் கோப் குழு தீர்மானித்துள்ளது.

(அ)

# பொருளாதார வளர்ச்சி 2024 இல் உறுதியாகும்

## அமைச்சர் செஹான் சேமசிங்க

கொழும்பு, நவ. 16

வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள், பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள், சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க, பதவியேற்றதன் பின்னர் சமர்ப்பித்த 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டமே மிகவும் சவால் மிக்க வரவு செலவுத்திட்டமாகும்.

அதில் இருந்து நாம் பெற்றுக்கொண்ட நிலையான தன்மைமை அடிப்படையாகக் கொண்டே, 2024ஆம் ஆண்டுக்கான அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், நாம் எதிர்பார்க்கும் பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணிக்கவும் அவசியமான பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

2024 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில், அரச வருமானம் 4127 பில்லியன் ரூபாவாகவும் அரச செலவினங்கள் 6978 பில்லியன் ரூபாவாகவும் வரவு - செலவுத்திட்டப் பற்றாக்குறை 2851 பில்லியன் ரூபா என்ற பிரதான இலக்கங்களுடனேயே நாம் இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றோம்.

இந்த வருட இறுதிக்குள் எமது கடன் மறுசீரமைப்புப் பணிகளை நிறைவு செய்து, நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டு, எமக்கு மீண்டும் இயல்பான பொருளாதார நடவடிக்கைகளை தொடரக்கூடிய சூழ்நிலையை நாட்டில் ஏற்படுத்த முடியும். அதற்காக வெற்றிகரமான பல்வேறு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம்.

கடன் பெறும் வரையறை அதிகரிக்கப்பட்டிருப்பது, மேலதிக கடன் பெறுவதற்கு அன்றி கடன் மறுசீரமைப்பு பணிகளின் போது எமக்கு அவசியமான நிதி நிலைகளை பேணிக்கொள்வதற்காகும். அதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி அவசியமாகும்.

குறிப்பாக, இந்த நடவடிக்கைகளின் மூலம் 2024 ஆம் ஆண்டை பலமான பொருளாதார ஆண்டாக மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும். பொருளாதார நடவடிக்கைகளை இயல்பாக மேற்கொள்ள ஆரம்பிக்கும் வருடமாக, 2024 ஆம் ஆண்டு அமையும் என்பது எமது நம்பிக்கையாகும் - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
16.12.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொருளாதார சீரழிவு குற்றவாளிகள்

ராஜபக்ஷ சகோதரர்களே நாட்டின் பொருளாதார சீரழிவுக்குப் பொறுப்புக் கூறவேண்டுமென்று, இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் ஐவரடங்கிய நீதிபதிகள் குழு தீர்ப்பளித்துள்ளது. இதன்மூலம், நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார அவலத்துக்கான பொறுப்பாளிகளாக மகிந்த ராஜபக்ஷ, கேட்டாபய ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ மற்றும் அவர்களது நியமனத்தில் முக்கிய பொறுப்புக்களை வகித்த சிலரும் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இது எதனை உணர்த்துகின்றது? 2009இல் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றியை தொடர்ந்து, ராஜபக்ஷக்கள் தென்பகுதியில் எழுச்சியடைந்தனர். 2005இல் மிகவும் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றார். விடுதலைப் புலிகளின் தேர்தல் பகிஷ்கரிப்பின் ஊடாகவே ராஜபக்ஷ வெற்றிபெற்றார் என்பதில் இரகசியம் எதுவுமில்லை. விடுதலைப் புலிகள் அவர்களது இலக்கில் முன்னேறுவதற்கான ஓர் உக்தியாகவே தேர்தல் பகிஷ்கரிப்பை கையாண்டனர். மேற்குலக விசுவாசியான ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற்றால், சமாதான முன்னெடுப்பிலிருந்து வெளியேற முடியாது என்பதை கணித்தே விடுதலைப் புலிகள், தங்கள் நகர்வை மேற்கொண்டனர். ஆனால் நிலைமைகள் விடுதலைப் புலிகள் எதிர்பார்த்தவாறு அமையவில்லை. ரணிலின் தோல்வியை தொடர்ந்து, விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒட்டுமொத்த உலகமும் திரும்பியது.

இறுதியில், மேற்குலகிற்கு எதிரான மகிந்த ராஜபக்ஷவின், யுத்தத்திற்கு, அனைவரும் பல்வேறு வழிகளிலும் உதவினர். அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தப் பிரகடனம், ராஜபக்ஷக்களுக்கு பழம் நழுவி பாலில் விழுந்த கதையானது. உலகச் சூழல், விடுதலைப் புலிகளுக்கு எதிராக இருந்த சூழலில்தான், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றி சாத்தியப்பட்டது. யுத்த வெற்றியைத் தொடர்ந்து, பயங்கரவாதத்தை வெற்றிகரமாக தோற்கடித்தவர்கள் என்னும் புதிய அந்தஸ்தை அரசியலாக்கும் வியூகமொன்றை ராஜபக்ஷ சகோதரர்கள் வகுத்துக் கொண்டனர். மேற்குலகின் மனித உரிமை கரிசனைகள் அனைத்தையும் நிராகரித்தனர். இந்த பின்புலத்தில்தான், இவ்வாறானதொரு சூழலுக்காக காத்திருந்த, சீனா - ராஜபக்ஷ குடும்பத்தின் எதேச்சாதிகாரத்தையும் அதிகார மோகத்தையும் - அதன் உள்நுழைவு தந்திரத்துக்கு பயன்படுத்திக் கொண்டது.

சீனாவுடனான நெருக்கத்தை தொடர்ந்தே, இலங்கையின் பொருளாதாரம் அதல பாதாளத்தை நோக்கி சரியத் தொடங்கியது. அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி, மத்தள ராஜபக்ஷ விமான நிலையம், நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி - என பாரிய திட்டங்களுக்காக சீனா பெருந்தொகையில் கடன்களை வழங்கியது. இந்தக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாதபோது, அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99வருட குத்தகைக்கு வழங்க வேண்டியேற்பட்டது.

ராஜபக்ஷக்கள் - சீன நெருக்கம் கிழக்காசிய நாடுகள் போன்று இலங்கையின் அரசியல் சூழலை மாற்றியது. ஜனநாயக அரசியலுக்கான சூழல் படிப்படியாக வீழ்சிடைந்து சென்றது. எனினும் சாதாரண சிங்கள மக்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த வெற்றிவாத கவர்ச்சியாலும், பின்னர் இடம்பெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் ஏற்படுத்திய அச்சத்தாலும் ராஜபக்ஷக்களை தங்களின் பாதுகாவலர்களாக பார்க்கும் போக்கே மேலோங்கியது. ராஜபக்ஷக்களின் தவறான பொருளாதார கொள்கையால் - நாடு அதல பாதாளத்தை நோக்கிச் சரியப் போகின்றது - என்னும் புரிதல் சாதாரண சிங்கள மக்களை ஆட்கொள்ளவில்லை.

இந்தப் பின்புலத்தில்தான், தனிச் சிங்கள வாக்கில் கோட்டாபய ராஜபக்ஷவினால் வெற்றிபெற முடிந்தது. இறுதியில் ராஜபக்ஷக்களின் தவறான கொள்கைகள் மக்களின் வாழ்வில் நேரடியாக மோதியபோதுதான், மக்கள் மத்தியில் புதிய விழிப்புணர்வொன்று உருவாகியது. அதன் விளைவான நெருக்கடியின் காரணமாகத்தான் உச்ச நீதிமன்றம் இவ்வாறானதொரு தீர்ப்பையும் வழங்க முடிந்திருக்கின்றது. ஒரு வேளை ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இருந்திருந்தால் இவ்வாறானதொரு தீர்ப்பை நாம் கண்டிருக்க முடியாது.

சீனாவின் முதலீடுகளை தூர நோக்குடன் அணுகாதுவிட்டால் ஒரு நாடு எவ்வாறான நிலைக்குள் செல்லும் என்பதற்கு ராஜபக்ஷக்களின் தவறான அணுகுமுறைகள் சிறந்த எடுத்துக்காட்டாகும். தற்போது வடக்கு, கிழக்கில் முதலீடுகளை செய்யப் போவதாக சீனா கூறுவதையும் அவதானமாக கையாள வேண்டும். சிறந்த பொருளாதார முகாமைத்துவத்துக்கான அரசியல் நிர்வாகம் இல்லாத போது, சீனா போன்ற பொருளாதார யானையிடமிருந்து நன்மைகளை பெறுவது இயலாத காரியமாகும். வடக்கு, கிழக்கை பொறுத்தவரையில் - தமிழ் மக்களிடம், ஆகக் குறைந்தது - மாகாண சபை நிர்வாகம் கூட இல்லை.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**



*“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.”*

**- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)**

# ரொஷான் ரணசிங்கவிடம் 2.4 பில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி வழக்கு தாக்கல்!

கொழும்பு, நவ. 16

கிரிக்கட் சபை தொடர்பில் அமைச்சர் ரொஷான் ரணசிங்க வெளியிட்ட அவதூறான கருத்துக்கள் தொடர்பில் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு எதிராக இலங்கை கிரிக்கெட் சபை 2.4 பில்லியன் ரூபாய் நட்டஈடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

அமைச்சரின் தொடர்ச்சியான மற்றும் அவதூறு அறிக்கைகளுக்கு பதிலளிக்கும் வகையில், தமது நற்பெயரை பாதுகாக்க தீர்க்கமான நடவடிக்கையை எடுத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை கூறியுள்ளது.

அமைச்சரின் தவறான மற்றும் அவதூறு பரப்பும் குற்றச்சாட்டுக்கள் இலங்கை கிரிக்கெட்டின் நன்மதிப்புக்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கை கிரிக்கெட் சபையானது வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நியாயமாக செயற்பட்டு வருவதாகவும் இன்று வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் அதன் உறுப்பினர்களின் நற்பெயரைப் பாதுகாக்கவும் விளையாட்டின் உணர்வை ஊக்குவிப்பதிலும், வீரர்கள், அதிகாரிகள் மற்றும் ரசிகர்களுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்துவதே சட்ட நடவடிக்கைக்கு காரணம் என்றும் அறிவித்துள்ளது.

(அ)

# தனி துறைமுகமாக்கப்பட்டது மன்னார் துறைமுகம்

மன்னார், நவ. 16

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் கீழ் மன்னார் துறைமுகம் தனியான துறைமுகமாக பெயரிடப்பட்டுள்ளது.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் இந்த வர்த்தமானி அறிவித்தல் அமுலாகின்றது.

மன்னார் மற்றும் இந்தியாவிற்கு இடையில் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதை நோக்கமாகக் கொண்டே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# கோட்டாபயவை ஆட்சி செய்யவிடாமையே நாட்டின் வங்குரோத்து நிலைக்கு காரணம்

## ரஞ்சித் பண்டார குற்றச்சாட்டு


கொழும்பு, நவ. 16

நாட்டின் வங்குரோத்து நிலைக்கு நல்லாட்சி அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என பொதுஜன பெரமுன உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை ஆட்சி செய்யவிடாத காரணத்தினாலேயே இன்று ஏற்பட்டுள்ள நிலைமைக்கு காரணம் என அவர் தெரிவித்தார். நல்லாட்சி அரசாங்கம் நாட்டை கடன் வலையில் சிக்க வைத்ததினால் தற்போது அவர்களே பொறுப்புக்கூற வேண்டியவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் ராஜபக்ஷவைத் தவிர வேறு எந்தக் குழுவும் அவமானப்படுத்தப்படவில்லை என்று கூறிய அவர், அப்பாவி மக்களுக்கு நிவாரணம் வழங்கச் செயல்பட்டதால்தான் கட்சிக்காரர்கள் அவமானப்படுத்தப்படுகிறதே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். வியாபாரத்தில் தொழில் ரகசியங்களை சொல் வேண்டாம். ஈகோ வந்து செல்லும். நிதானம் தேவைப்படும் நாள்.

**இடபம்**

உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். பெரிய பொறுப்புகள் தேடி வரும். அமோகமான நாள்.

**கடகம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உறவினர்களின் அன்புத் தொல்லை குறையும். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**

எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**

திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் கமிஷன் ஸ்டேஷனரி வகைகளால் லாபமடைவீர்கள். உங்களின் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**

கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் பல வேலைகளை பார்க்க வேண்டி வரும். சிலர் தவறாக பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**தனுசு**

வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விட்டுக் கொடுத்து போங்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**மகரம்**

புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**கும்பம்**

நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். சாதிக்கும் நாள்.

**மீனம்**

குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

# அ.தி.மு.க. இளைஞர்கள் அண்ணாமலை பக்கம் திரும்புவதை தடுப்பதில் தீவிரம்

## நிர்வாகிகளுடன் விவாதிக்கிறார் பழனிசாமி

சென்னை, நவ. 16

**பாராளுமன்ற தேர்தல் நெருங்குவதையொட்டி கட்சியை பலப்படுத்துவது, மக்கள் ஆதரவை திரட்டுவது போன்ற பணிகளில் அனைத்து கட்சியினரும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.**

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு அ.தி.மு.க.-பா.ஜனதா இடையேயான உறவு முறிந்தது. அதன் பிறகு பா.ஜனதா தலைவர் அண்ணாமலை என் மண், என் மக்கள் யாத்திரை மூலம் மக்களை திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அவரது யாத்திரைக்கு பெருமளவில் கூட்டம் திரளுவது தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட எல்லா கட்சிகளையுமே திரும்பி பார்க்க வைத்துள்ளன.

இந்த சூழ்நிலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் சிதம்பரத்தில் நிருபர்களிடம் கூறும்போது, அண்ணாமலை யாத்திரையில் அ.தி.மு.க. மற்றும் பா.ம.க.வை சேர்ந்த இளைஞர்கள் கலந்து கொள்கிறார்கள் என்று கொளுத்தி போட்டார்.

இது அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை யோசிக்க வைத்தது. இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் இளைஞர்கள் வெளியேறுவது உடனடியாக தடுக்கப்பட வேண்டும் என்று தீவிரமாக இருக்கிறார்.

இது தொடர்பாக வருகிற 21 ஆம் திகதி கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெறும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் விவாதிக்க திட்டமிட்டுள்ளார்.

கூட்டத்தில் மேலும் மகளிர் பிரிவு மற்றும் 2024 பாராளுமன்ற தேர்தலுக்குத் தயாராகும் வாக்குச் சாவடிகளுக்கான குழுக்கள் அமைக்கப்படும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி சில நாட்களுக்கு முன் அறிவித்தார்.

2024 பாராளுமன்ற தேர்தலின் போது தமிழகத்தில் அதீத சக்தியாக உருவெடுக்கும் நோக்கில், அ.தி.மு.க.வின் இமேஜை புதுப்பித்து, மதச்சார்பற்ற தகுதியை மீட்டெடுத்து, அ.தி.மு.க.வை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே பழனிசாமியின் திட்டமாக இருக்கிறது.

(அ)

# கட்சி நலனுக்காக அப்பாவிகளை பலி கொடுக்கின்றது தி.மு.க. அரசு

## அண்ணாமலை குற்றச்சாட்டு

சென்னை, நவ. 16

தங்கள் கட்சிக்காரர்கள் வருமானத்துக்காக, அப்பாவிப் பொதுமக்கள் உயிரை பலி கொடுத்துக் கொண்டிருக்கிறது தி.மு.க. என தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்லார்.

அவர் தனது எக்ஸ் பக்கத்தில் கூறி இருப்பதாவது:-

சென்னை அண்ணா நகரில், மதுபோதையில் வாகனத்தை ஓட்டியதால் ஏற்பட்ட விபத்தில், இருவர் பலியாகியிருக்கிறார்கள். பலர் படுகாயம் அடைந்து உள்ளனர். அதே நேரம், தமிழகத்தில் கடந்த 2 நாட்களில் மட்டும் நடந்த மது விற்பனை, சுமார் 467.69 கோடி என டாஸ்மாக் நிறுவனம் பெருமையுடன் அறிவித்துள்ளது.

மதுவிலக்கு துறையா அல்லது மது விற்பனை துறையா என்ற சந்தேகம் வரும் அளவுக்கு, மது விற்பனையில் சாதனை படைத்து வருகிறது தி.மு.க. அரசு. மதுவால் ஏற்படும் உடல் நலக்குறைவு மரணங்கள், இது போன்ற விபத்துக்களால் பலியாகும் அப்பாவிகளின் மரணங்கள் எதைப் பற்றியும் கவலை இன்றி, உச்சவரம்பு நிர்ணயித்து மது விற்பனை நடத்தி வருகிறது.

தி.மு.க.வினர் நடத்தும் மது ஆலைகளிடம் வாங்கி விற்கும் டாஸ்மாக் நிறுவனத்தின் விற்பனை இத்தனை என்றால், அந்த ஆலைகள் நடத்தும் தி.மு.க. வினரின் வருமானம் என்னவாக இருக்கும்? தங்கள் கட்சிக்காரர்கள் வருமானத்துக்காக, அப்பாவிப் பொதுமக்கள் உயிரை பலி கொடுத்துக் கொண்டிருக்கிறது தி.மு.க.- என அந்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என்.சங்கரய்யா மறைவு

சென்னை, நவ. 16

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் என். சங்கரய்யா உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். அவருக்கு வயது 102.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான என்.சங்கரய்யா சென்னை குரோம்பேட்டை நியூ காலனியில் வசித்து வந்தார். அவருக்கு சளி தொந்தரவு, காய்ச்சல் காரணமாக ஆக்சிஜன் குறைவு ஏற்பட்டதால் சென்னை அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி அவரது உயிர் நேற்று பிரிந்தது.

முன்னதாக, கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் மருத்துவமனைக்கு சென்று அவரை பார்த்ததுடன், மருத்துவர்களையும் சந்தித்து சிகிச்சை தொடர்பாக கேட்டறிந்தனர். சங்கரய்யாவின் மகன் நரசிம்மன் மற்றும் தென்சென்னை மாவட்ட செயலாளர் ஆர்.வேல்முருகன் உள்ளிட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் உடன் இருந்து கவனித்து வந்தனர். ஆனால், சிகிச்சைக்கு அவர் உடல் ஒத்துழைக்காமல் உயிர் பிரிந்தது.

இந்நிலையில் அவரது மறைவு அக்கட்சியினர் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# கம்யூனிஸ்ட் தலைவர் சங்கரய்யாவுக்கு அரசு மரியாதையுடன் இறுதிச் சடங்கு

சென்னை, நவ. 16

விடுதலைப் போராட்ட வீரராக, சட்டமன்ற உறுப்பினராக, அரசியல் கட்சித் தலைவராக சங்கரய்யா தமிழகத்துக்கு ஆற்றிய தொண்டினைப் போற்றும் விதமாக அவருக்கு அரசு மரியாதையுடன் பிரியாவிடை அளிக்கப்படும்,என்று தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி: -

தகைசால் தமிழர், முதுபெரும் பொதுவுடைமைப் போராளி, விடுதலைப் போராட்ட வீரர் தோழர் என். சங்கரய்யா மறைந்த செய்தியால் துடிதுடித்துப் போனேன். மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த அவர் விரைந்து நலம் பெற்று விடுவார் என்றே நம்பியிருந்த வேளையில் அவர் மறைந்த செய்தி வந்து அதிர்ச்சியையும் வேதனையையும் அளித்தது.

மிக இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, 102 வயது வரை இந்திய நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்துக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் வாழ்ந்து மறைந்த தோழர் சங்கரய்யாவின் வாழ்க்கையும் தியாகமும் என்றென்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கும்- என்றார்.

(அ)

# எஞ்சியுள்ள வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு வழி உண்டா?

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் கேள்வி

**கொழும்பு, நவ. 16**

**வடக்கிலிருந்து புலம்பெயர நேரிட்ட முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகாண முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கிலிருந்து புலம்பெயரச் செய்யப்பட்ட முஸ்லிம்களின் சவால்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. 33 வருடங்கள் கடந்தும் முறையான வேலைத்திட்டங்கள் வகுக்கப்படவும் இல்லை. மீளக்குடியேறும் இம்மக்களின் முயற்சிகளை அங்குள்ள அரச அதிகாரிகளும் ஒரு சில அரசியல்வாதிகளும் தடுத்து நிறுத்தவே முயற்சிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களின் வாக்காளர் இடாப்பிலிருந்து அவர்களின் பெயர்களை நீக்கும் முயற்சிகள் இடம்பெறுகின்றன. அரச அதிகாரிகளின் இத்தகைய செயல்கள் அப்பட்டமான இனச்சுத்திகரிப்பாகும். 1990இல், வடக்கிலிருந்து புலிகள் இதே பாணியில்தான் முஸ்லிம்களை வெளியேற்றினர். இன்னும், இதே சிந்தனையில் அரச அதிகாரிகள் செயற்படுவது வெட்கக்கேடானது.

நான் அமைச்சராக இருந்த வேளை, முப்பதாயிரம் தமிழர்களை மீளக்குடியேற்றினேன். ஆனால், முஸ்லிம்களை குடியேற்ற வடக்கிலுள்ள அதிகாரிகள் விரும்பவில்லை. எனினும், அரபு நாடுகளின் உதவிகளைப் பெற்று பலத்த சவால்களுக்கு மத்தியிலேதான், ஏழாயிரம் வீடுகளை நிர்மாணித்து முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்பட்டனர்.

முல்லைத்தீவில் முஸ்லிம்களை குடியேற்ற காணிகளை துப்புரவு செய்தபோது, எங்களது முயற்சிகளுக்கு குறுக்காக நின்ற சிலர், எங்களை கொன்றுவிட்டுத்தான் முஸ்லிம்களை குடியேற்ற வேண்டும் என்றனர். எங்களிடம் அதிகாரம் இல்லாத நிலையில், முஸ்லிம்களின் காணிகளை இலஞ்சம் பெற்று வேறு பலருக்கு விற்கும் நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன. எனவே, எஞ்சியுள்ள வடக்கு முஸ்லிம்களை மீளக்குடியேற்ற முறையான வேலைத்திட்டத்தை கோருகின்றேன். இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போருக்கே எதிர்வரும் தேர்தலில் எமது ஆதரவு.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்துக்கு ஜெனீவாவில் வழங்கப்பட்ட உறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். இவர்கள் மீள்குடியேறும் வரை எதிர்கொள்ளும் தொழில்ரீதியான சவால்களை தீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்-என்றார்.

(அ)



# அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமானது சிரமதான பணி!

## இராணுவத்திடம் இருந்து காணியை விடுவிக்குமாறும் கோரிக்கை

முலைத்தீவு, நவ. 16

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 24 ஆவது படைப்பிரிவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தியதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்து கொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் கருத்து தெரிவித்தனர்.

அத்தோடு மாவீரர் நாளினை நினைவு கூருவதற்கான உரிய இடவசதி இல்லாது தாம் துன்பப்படுவதாகவும் குறித்த காணியை விடுவித்து உதவுமாறும் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ)

# கலாசாலையில் நூற்றாண்டு சிறப்புரை நிறைவு நிகழ்வு

## மருத்துவர் சத்தியமூர்த்தி ஆற்றினார்

யாழ்ப்பாணம், நவ. 16

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் தொடர்ச்சியாக ஒவ்வொரு புதன்கிழமையும் இடம்பெற்று வந்த நூற்றாண்டுச் சிறப்புரை நிகழ்ச்சியின் நிறைவு நிகழ்வு நேற்று காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அதிதியாகக் கலந்து கொண்டு ஆசிரியரும் நேர்மனப்பாங்கும் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் அதிதி அறிமுகவுரையை ஆற்றினார்.

நிகழ்வின் போது நூற்றாண்டு நிகழ்வுகளை ஆவணப்படுத்துவதில் பங்களிப்பு நல்கிய கலாசாலையின் கற்பித்தல்சாரா உத்தியோகத்தர் செல்வநாயகம் கஜந்தன் மற்றும் ஆசிரிய மாணவர்களான தங்கன் இன்பதாசன், செலஸ்தீன் கனிஸ்ரன் ஆகியோர் கலாசாலை ஊடக மன்றத்தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

ஊடக மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவின் நெறிப்படுத்திலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மருத்துவர் சத்தியமூர்த்தி கௌரவம் பெற்ற மூவருக்குமான நூற்றாண்டு நினைவுச் சின்னங்களை வழங்கிக் கௌரவித்தார். (அ)





# நான் என்ன செய்வது என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

## ஊடகவியலாளரிடம் கேட்ட ஜனாதிபதி



கொழும்பு, நவ. 16

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளீர்களா என கேள்வி எழுப்பிய பத்திரிகையாளரிடம் நான் என்னசெய்யவேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள் என ஜனாதிபதி பதில் கேள்வி எழுப்பி சுவாரஷ்யமாக உரையாடியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கேள்வி - ஜனாதிபதியானதும் நீங்கள் தனித்துவிட்டதாக தெரிவித்தீர்கள் - நாங்கள் அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ளவுள்ளோம் உங்களின் எதிர்கால திட்டங்கள் என்ன நீங்கள் மீண்டும் ஜனாதிபதியாவதற்காக தேர்தலில் போட்டியிட விரும்புகின்றீர்களா ஐக்கிய தேசிய கட்சியை வலுப்படுத்தி அதன் சார்பில் போட்டியிடப்போகின்றீர்களா அல்லது கூட்டணியை ஏற்படுத்தப்போகின்றீர்களா?

பதில்- ஐக்கிய தேசிய கட்சி அடுத்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறவிரும்புகின்றது ஏன் என்றால் அவர்கள் மாத்திரமே உண்மையை பேசினார்கள் - தெரிவித்தார்கள் அதன் காரணமாகவே அவர்கள் அரசியலில் இருந்து அகற்றப்பட்டார்கள் -அதுவே அவர்களின் பலமான விடயமாக காணப்படப்போகின்றது.

பல புதிய முகங்கள் உள்ளன அரசாங்கத்தில் எதிர்கட்சியில் உள்ள பலர் உள்ளனர் அவர்களும் போட்டியிடுவார்கள். நாங்கள் வங்குரோத்துநிலையை இல்லாமல் செய்வதே - அழிப்பதே எனது முதல் பணி.

வங்குரோத்து நிலையை இல்லாமல் செய்ததும் நாங்கள் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம் அந்த தருணத்தில் என்ன செய்வது என்பதை நாங்கள் தீர்மானிக்கவேண்டும். வங்குரோத்து நிலையை ஒழிப்பதற்காக உங்கள் அனைவரினதும் ஆதரவை பெறுவதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.

கேள்வி- உங்கள் திட்டங்கள் நோக்கங்கள் வெற்றிபெற்றால் நீங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவீர்களா?

பதில்- நான் என்ன செய்ய வேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள் நான் உங்களை கேட்கின்றேன் நான் அதற்கு பதிலளித்தால் பல எதிர்வினைகள் வெளியாகலாம். ரணில்- விடை என்ன?

கேள்வி - ஏன் போட்டியிடக்கூடாது அப்படியானால் ஏன் மக்களிடமிருந்து எதிர்வினைகள் வெளியாகலாம் என தெரிவிக்கின்றீர்கள்?

பதில்- நான் அவ்வாறு தெரிவிக்கவில்லை ஆனால் நான் உங்களின் தனிப்பட்ட திட்டங்கள் என்னவென்பதை அறியவிரும்புகின்றேன் . நான் அது முடிவடையும்வரை காத்திருப்பேன் என தெரிவித்தேன்.

பொருளாதார நிலைமைய சாதகமான விதத்தில் மாற்றியமைப்பதே எனது நோக்கம் நாங்கள் அந்த இலக்கை நெருங்கிவிட்டோம், நான் அரசியல் இல்லாமல் புதிய பொருளாதாரத்தை அறிமுகப்படுத்த விரும்புகின்றேன் - நாங்கள் அது குறித்து கலந்துரையாடுவோம்-என்றார்.

(அ)

# முல்லைத்தீவு கொக்குதொடுவாயும் தமிழரிடம் இருந்து பறிபோகின்றதா?

முல்லைத்தீவு, நவ. 16

**முல்லைத்தீவு கொக்குதொடுவாய் வடக்கு15ஆம் கட்டை பகுதியில் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சிங்கள மீனவர்கள் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனால் குறித்த பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.**



புலிபாய்ந்தகல் பகுதியில் பெரும்பான்மையினத்தை சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி வாடி அமைத்து தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை பிரதேச செயலகத்தினால் அறிவித்தல் வழங்கப்பட்டு வாடிகளை அகற்றுமாறு கோரி பதாகை காட்சி படுத்தப்பட்டு இருந்தது. இந்நிலையில் கொக்குதொடுவாய் 15ஆம் கட்டை பகுதியில் இவர்கள் வாடிஅமைத்து சட்டவிரோத தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

குறித்த சம்பவத்தினால் மீனவர் சங்கத்தினர், கிராம அமைப்புக்கள் இணைந்து பெரும்பான்மை இனத்தை சேர்ந்த மீனவர்களிடம் பிரச்னை தொடர்பாக கேட்டபோது, குறித்த இடத்தினை பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த பிக்கு ஒருவர் தந்த இடமாகவும், தாம் அதனை வாங்கி விட்டதாகவும் அதனாலேயே இங்கே வாடி அமைத்து தொழில் செய்வதாகவும் கூறியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் முல்லைத்தீவு கடற்தொழில் திணைக்களத்திடம் குறித்த மக்கள் தெரியப்படுத்தியிருந்த வேளை அத்துமீறி தொழில் செய்யும்போது தமக்கு அறிவித்தல் வழங்குமாறும், தாம் உடனடியாக அவ் இடத்திற்கு வருவதாகவும் கூறியிருந்தனர்.

ஆனால் இவ் விடயம் தொடர்பாக தொலைபேசியில் தகவல் வழங்கி இருந்தும் திணைக்களத்தினர் வருகை தரவில்லை எனவும் குறித்த பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைய காலங்களில் தொடர்ச்சியாக தமிழ் மீனவர்கள் தொழில் செய்து வரும் இடங்களை பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு புலிபாய்ந்தகல், தண்ணிமுறிப்பு, கொக்குதொடுவாய் வடக்கு என இவ்வாறு தொடர்ச்சியாக அத்துமீறி பெரும்பான்மையின சிங்கள மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். (அ)

# மக்களுக்கு இழப்பீடு வழங்க தேவையான பணம் ராஜபக்ஷ தரப்பினரிடம் இருக்கிறது

### கூறுகிறார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, நவ. 16

நாட்டில் உள்ள 22 மில்லியன் மக்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கு தேவையான பணம் ராஜபக்ச குடும்பத்தினரிடம் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வரவு-செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் ,தனை கூறினார்.

அத்துடன் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் உரிய முறையில் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் பொறுப்புடையவர்களிடம் இருந்து பணத்தை மீட்கும் பணியை இப்போதே ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அப்போதைய ஜனாதிபதியாக செயற்பட்ட மகிந்த, அவரது சகோதரர்கள் மற்றும் அவர்களுடன் பணியாற்றிய பலரால் அரசாங்கம் மற்றும் பொது மக்களின் சொத்துக்கள் கொள்ளையடிக்கப் பட்டதனாலேயே நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் இழப்பீடு வழங்குமாறும், கொள்ளையடிக்கப்பட்ட பணத்தை திறைச்சேறிக்கு கொண்டு வரும்படியும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# மதுபானம் விலை உயராது

கொழும்பு, நவ. 16

இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் மதுபான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள போதிலும், அதன் மூலம் மதுபானங்களின் விலையை அதிகரிக்க வாய்ப்பில்லை என கலால் திணைக்களத்தின் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்

அத்துடன் மதுபானசாலைகள் திறக்கப்படும் காலத்தை அவ்வப்போது திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கலால் திணைக்களத்தின் பேச்சாளர் கபில குமாரசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு குருதிக் கொடை முகாம் நாளை!

வடமராட்சி, நவ.15

பருத்திதுறை ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு குருதிக் கொடை முகாம் நாளை வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஹாட்லியின் மைந்தர்களது 24 ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களது குடும்பத்தவர் மற்றும் நண்பர்களால் நாளை உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

கல்வி செயற்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரை பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்திருந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களான பூரணமூர்த்தி கந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவோத்தமன், பாலகிருஸ்ணன் பிரதீபன் ஆகிய நான்கு பேரின் 24 ஆவது ஆண்டு, மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம் குணரட்ணம் என்ற மாணவனது 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட உள்ளது.

இதையடுத்து ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் முன்னெடுக்கப்பட்டு வரும் குருதிக் கொடை முகாம் நாளை காலை 09.00 மணி முதல் ஹாட்லி கல்லூரி மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக யாழ் மாவட்டத்தில் உள்ள வைத்திய சாலை இரத்த வங்கிகளில் பாரிய குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் வடமராட்சி பிரதேசத்தில் உள்ள தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் இக் குருதிக் கொடை முகாமில் பங்கேற்று குருதி வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-2)

# புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருக்கு அஞ்சலி

முல்லைத்தீவு, நவ. 16

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான க.விஜயகுமார் நேற்று முன் தினம் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புகள், பௌத்தமயமாக்கல் உள்ளிட்ட இலங்கை அரசின் அத்துமீறல் செயற்ப்பாடுகளுக்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளரும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான க.விஜயகுமார் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.



இவருடைய உடல் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு உடையார் கட்டுப் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டதோடு நேற்று மாலை இவரது இறுதி நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் இவரின் பூதவுடலுக்கு கட்சி கொடியினை போர்த்தி அஞ்சலி செலுத்தினர். (அ)

# அஸ்வெசும நலன்புரி நன்மை மூன்று மடங்காக அதிகரிப்பு

கொழும்பு, நவ. 16

அஸ்வெசும நலன்புரி நன்மை மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். புதிய சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கிலேயே அஸ்வெசும நலன்புரித் திட்ட கொடுப்பனவுகள் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதென வித்யார்த்த கல்லூரியின் கொழும்பு பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 2024 வரவு-செலவுத் திட்டம் தொடர்பான அறிவியல் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை ஒரே வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக தீர்க்கவோ அல்லது புறக்கணிக்கவோ முடியாது எனவும், அந்த நிலையை எதிர்கொள்ள அரசாங்கம் நாட்டை தயார்படுத்த வேண்டும் எனவும், தற்பொழுது அந்த பணியையே அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது எனவும் இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி ரணில் மேலும் குறிப்பிட்டார். (அ)

# வவுனியாவில் 15 குளங்கள் உடைப்பு!

வவுனியா, நவ. 16

வவுனியாவில் 93 குளங்கள் வான் பாய்வதுடன், 15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாக கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களிற்கான நீர் வரத்து அதிகரித்தமையினால், குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து 93 குளங்கள் வான் பாய்கின்றன. மேலும் பல குளங்கள் வான் பாயும் கட்டத்தை அடைந்துள்ளன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 15 குளங்கள் சிறு உடைப்பெடுத்த நிலையில் அவை தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வான் பாய்வதனை அதிகளவான மக்கள் பார்வையிட்டு வருவதுடன் நீர்நிலைகளில் மீன்பிடித்தும் வருகின்றமையும் அவதானிக்க கூடியதாக இருந்தது. (அ)

# வடக்கிலுள்ள சிறுவர் தொடர்பில் ஐ.நா கரிசனை கொள்ளவேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 16

**சிறுவர்களின் திறன் மேம்பாடு, பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் முன்வர வேண்டும் என வடமாகாண ஆளுநர் கோரிக்கை விடுத்துள்ளார்.**



ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளுக்கும், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸூக்கும் இடையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் கற்றல் செயற்பாடு முன்னெடுக்கப்படும் விதங்கள் சிறுவர்களுக்கான திறன் மேம்பாட்டு செயற்பாடுகள், சிறுவர் துஷ்பிரயோகம், சட்ட விரோத செயற்பாடுகள், பெற்றோர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விழிப்புணர்வு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில், ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய பிரதிநிதிகளுக்கு ஆளுநரால் இதன்போது எடுத்துரைக்கப்பட்டது,

அத்துடன், சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படாமல் இருப்பதற்கு தேவையான விழிப்புணர்வு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் இது தொடர்பில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் தங்களுக்கு தேவையான உதவிகளை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நிலையில், இது தொடர்பான செயற்பாடுகளுக்கு ஐ.நா சிறுவர் நிதியம் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும், வட மாகாண ஆளுநரால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி **Christian Skoog** இதன்போது தெரிவித்துள்ளார்.

(அ)

நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான

# 21 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 16

இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்கள் நிபந்தனைகளுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 14 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் 12 தமிழக மீனவர்கள் 3 படகுகளுடன் கைது செய்யப்பட்டதுடன், 28 ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் 2 படகுகளுடன் மேலும் 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த 26 மீனவர்களில் 04 பேர் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் கடந்த 08 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஏனைய 22 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஜே.கஜநிதிபாலன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அவர்களில் ஒருவர் 2022 ஆம் ஆண்டு எல்லை தாண்டி மீன்பிடித்தமைக்காக கைது செய்யப்பட்டு, ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டிருந்தமை தெரியவந்தது.

ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்தில் மீண்டும் எல்லை தாண்டி மீன்பிடித்ததால், அவரை சிறையிலடைக்குமாறு நீதவான் ஜே.கஜநிதிபாலன் உத்தவிட்டார்.

முன்னர் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றத்திற்காக 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், தற்போது மேலும் 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்பட்ட 18 மாதங்கள் சிறைத்தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க மீனவர் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, அதனை 6 மாதங்களாகக் குறைத்து மொத்தமாக 24 மாதங்கள் சாதாரண சிறைத்தண்டனை விதித்த நீதவான் அந்த மீனவரை சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டார்.

ஏனைய 21 மீனவர்களுக்கும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சாதாரண சிறைத்தண்டனை விதித்து நீதவான் ஜே.கஜநிதிபாலன் அவர்களை விடுதலை செய்தார். (அ)

# கிரிக்கெட் சபை சாட்சிகளை எவருமே கட்டுப்படுத்தமுடியாது

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்



கொழும்பு, நவ. 16

கோப் குழுவின் தலைவருக்கு கிரிக்கெட் சபையின் சாட்சிகளை கட்டுப்படுத்த முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை கிரிக்கெட் அணியை தடைசெய்யுமாறு ஐ.சி.சிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபையினால் தான் இதற்கான தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இது தேச விரோதமான செயற்பாடாகும். கிரிக்கெட் ரசிகர்களுக்கு மட்டுமன்றி 220 இலட்சம் மக்களுக்கும் இழைக்கப்பட்ட பாரிய துரோகமாகும்.

இது தொடர்பான உடனடியாக விசாரணை நடத்த வேண்டும்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலுக்கு சென்று இந்த தரவுகளை வழங்கியது யார் என்பதை கண்டறிய விசாரணை நடத்த வேண்டும்.

மேலும், கோப் குழுவின் முன்னிலையில் நேற்று கிரிக்கெட் சபை முன்னிலையான போது, கோப் குழுவினர் தலைவர் ரஞ்ஜித் பண்டார, யாரோ ஒருவரை பார்த்து பதில் வழங்க வேண்டாம் என சைகை காண்பித்த காட்சிகளை நாம் ஊடகங்கள் வாயிலாக பார்த்தோம்.

கோப் குழுவின் தலைவர் பொருத்தமாகவோ அல்லது பொருத்தமற்ற வகையிலோ சாட்சியாளர்களின் பதிலை கட்டுப்படுத்த முயன்றுள்ளார்.

இது பாரதூரமான விடயமாகும். சபாநாயகர் இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்.

கோப் குழுவின் அங்கத்தவர்களாக உள்ள ஹேஷா விதானகே மற்றும் எஸ்.எம்.மரிக்கார் உள்ளிட்டவர்களின் சிறப்புரிமையும் மீறப்பட்டுள்ளது.

கோப் குழுவின் தலைவருக்கு கிரிக்கெட் சபையின் சாட்சிகளை கட்டுப்படுத்த முடியாது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

# கிரிக்கெட் சபை கொள்ளையிட்டதை முழு நாடுமே ஏற்றுக்கொண்டுள்ளது!

## ஹேஷா விதானகே சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 16

கிரிக்கெட் சபை கொள்ளையடித்துள்ளது என்பதை ஒட்டு மொத்த நாடும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், அந்தக் கொள்ளைக் கூட்டத்தை பாதுகாக்க கோப் குழுவின் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார் என பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் சபை கோப் குழுவில் முன்னிலையானது. இவர்களிடம் இரண்டு மணிநேரம் சாட்சிகள் பெறப்பட்டன.

ஆனால், இந்த இரண்டு மணித்தியாலங்கள் தொடர்பாக சபாநாயகர் விசாரணை நடத்த வேண்டும்.

இந்த இரண்டு மணித்தியாலங்களில் மக்களின் ஆணையை காலால் எட்டியுதைக்கும் செயற்பாடுதான் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கோப் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்கள், இந்த பணியை மிகவும் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர்.

இதற்கு மேலும் கிரிக்கெட் சபையை கோப் குழுவுக்கு முன்னிலைப்படுத்தினால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றவாளிகளாகவும், கிரிக்கெட் சபை உறுப்பினர்கள் தூய்மையானவர்களாகவும் மாற்றப்பட்டு விடுவார்கள்.

கிரிக்கெட் சபைக்கு எதிராக பாரதூரமான கேள்விகள் கேட்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், கோப் குழுவின் தலைவர், இவற்றுக்கு பதில் வழங்க வேண்டாம் என கிரிக்கெட் சபை அதிகாரிகளுக்கு சைகை மூலம் காண்பித்துக் கொண்டிருந்தார்.

கிரிக்கெட் சபை கொள்ளையடித்துள்ளது என்பதை ஒட்டு மொத்த நாடும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், அந்தக் கொள்ளைக் கூட்டத்தை பாதுகாக்க கோப் குழுவின் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

27,28,29 ஆகிய தினங்களின் கோப் குழு முன்னிலையில் கிரிக்கெட் சபையை மீண்டும் அழைப்பித்து, கோப் குழுவின் தலைவர் இன்றி விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்- என்றார்.

(அ)

# மதுபானசசாலைகள் 24 மணி நேரமும் திறந்திருப்பதை வரவேற்கிறார் டயானா

கொழும்பு, நவ. 16

மதுபானக் கடைகள் மற்றும் மதுபானசாலைகளுக்கு அதிக நேரம் திறந்திருக்கும் முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வரவேற்றுள்ளார்.

சட்டவிரோத மதுபான விற்பனையை தடுக்கும் வகையில் 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பார்கள் மற்றும் மதுபானக் கடைகள் அதிகளவு நேரம் திறந்திருக்கும் முறையை அறிமுகப்படுத்த ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். சுற்றுலா ஊக்குவிப்பு செயற்பாடுகள் தொடர்பான ஒழுங்குமுறைகள் மற்றும் மென் மதுபான உரிமங்களுக்கான புதிய கொள்கையொன்றை திருத்துவதற்கான யோசனையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்டது.

இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் கருத்து தெரிவிக்கையில் , "இந்த முன்மொழிவு குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன், மேலும் இலங்கையில் சட்டவிரோதமான மதுபான விற்பனையை நிறுத்துவதற்கான ஒருவித முறைமை இருக்க வேண்டும் " என அவர் தெரிவித்தார்.

மதுபானக் கடைகள் மற்றும் மதுபானசாலைகளை மூடும் நேரத்தை நீடிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்த அதேவேளை, அவை 24 மணி நேரமும் திறந்திருக்க வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தினார்.

(அ)

# பனங்காடு வைத்தியசாலையில் இரு மாடிக் கட்டடம் கையளிப்பு

அம்பாறை, நவ. 16

**உலக வங்கியின் நிதியுதவியில் ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்தும் திட்டத்தின் ஊடாக பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் திங்கட்கிழமை பாவனைக்காக வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.**



வெளிநோயாளர் மற்றும் கிளினிக் பிரிவுகளைக்கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குறித்த கட்டிடம் கையளிக்கும் நிகழ்வு பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் யூ.எல். எம்.சகீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகவும், முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், தற்போதைய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான டொக்டர் ஜீ.சுகுணன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு குறித்த கட்டடத்தினை கையளித்தனர்.

இந்நிகழ்வில் ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் திரு.வீ.பபாகரன், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.சீ.எம்.மாஹிர், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இல்ஹாம், பிராந்திய ஆயுள்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ.நபீல், பனங்காடு வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளான எஸ். குணாலினி, எஸ்.நௌஷாட், டிலினி மல்ஷா உள்ளிட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் என பலர் கலந்துகொண்டனர்.

பனங்காடு வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளிலும் உதவி செய்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களான வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் மற்றும் டொக்டர் ஜீ.சுகுணண் ஆகியோர் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரால் இந்நிகழ்வின் போது பாராட்டிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தென்கிழக்கு பல்கலை ஊடக பிரிவுக்கு புதிய நிர்வாகிகள் நியமிக்கப்பட்டனர்



அம்பாறை, நவ. 16

தென்கிழக்கு பல்கலைகழக ஊடக பிரிவுக்கு புதிய நிர்வாகிகள் பல்கலைகழக உப வேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

பல்கலைகழக ஊடக பிரிவின் இணைப்பாளராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ.ஷிப்லி, செயலாளராக தென் கிழக்கு பல்கலைக்கழக கணக்காய்வு உதவியாளர் எஸ்.எம். கலீல் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஊடக பிரிவுக்கு உறுப்பினர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.எம். சிராஜ், விரிவுரையாளர் எம் அப்துல் ரஸாக், விரிவுரையாளர் சதீக்கா பர்வீன், விடுதி பொறுப்பாளர் ஆர். ரிஸானா, சிரேஷ்ட நூலக உதவியாளர் சீ.எம்.ஏ. முனாஸ், ஆய்வு கூட உதவியாளர் எம் வை அமீர், உட்பட பல்கலைக்கழக மாணவர் சார்பில் எம்.ஏ. ஸீம் பிஸ்தி (கலை கலாச்சார பீடம்), டி. எம்.வை. லசித் (பொறியியல் பீடம்), இஸட்.எஸ்.எஸ். குணரத்ன (தொழிநுட்ப பீடம்) ஆகியோரும் ஊடக பிரிவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்கலைகழக ஊடக பிரிவினை பலப்படுத்தி மாணவர்களை ஒன்றிணைத்து எதிர்காலத்தில் சிறப்பாக பெறுபேறுகளை மக்கள் முன் கொண்டு செல்ல ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்து விஷேட கலந்துரையாடலும் உபவேந்தர் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலருணவு பொதிகள் வழங்கல்



அம்பாறை, நவ. 16

உலக உணவுத் திட்டம் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பல்வேறு வகையான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அதன் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள வறிய, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் உலர் உணவுகளை வழங்கும் வேலைத் திட்டத்திற்கு உதவிக் கரம் நீட்டிவருகின்றது.

அந்தவகையில், நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 25 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 2793 பயனாளிக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

அவர்களுக்கான உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ எம். அப்துல் லத்தீப் அவர்களின் தலைமையில் நேற்று முன் தினம் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம அவர்கள் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தார்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் ஒரு குடும்பத்திற்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான ரூபா. 15,000 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந் நிகழ்வில் அதிதிகளாக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஏ.அனீஸ், உலக உணவுத் திட்டத்தின் இணைப்பாளர் எஸ்.பத்மன் மற்றும் உலக உணவுத்திட்ட நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஏ.வின்சன் அவர்களும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

மேலும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எம்.சுல்பிகார் அவர்களின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஏனைய அதிதிகளாக நிந்தவூர் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், நிருவாக கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர், மேலதிக மாவட்ட பதிவாளர் மற்றும் இத்திட்டத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர். (அ)

# பாடசாலைகளில் தொழில் முயற்சியாண்மை தேசிய வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம்!

## பேராசிரியர் குணபாலன் சிறப்பு பேச்சாளராக பங்கேற்பு

அம்பாறை, நவ. 16

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இலங்கையின் கல்வி அமைச்சும் இணைந்து கைத்தொழில் அமைச்சும் இணைந்து கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடாக பாடசாலைகளில் தொழில் முயற்சியாண்மை வட்டம் என்ற தேசிய வேலைத்திட்டத்தை அமுலாகி வருகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் முதன் முதலாக திருக்கோவில் வலயத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று இராம கிருஷ்ணா தேசிய பாடசாலையில் இவ் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் செல்வரெத்தினம் குணபாலன் சிறப்புப் பேச்சாளராக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் சி. மதியழகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்துறை சிரேஷ்ட பேராசிரியர் செல்வரெத்தினம்.குணபாலன் விருந்தினராக மோரிச் லிமிட்டெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்பிஎம்..நளீம் இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அம்பாரை மாவட்ட பிரதி பணிப்பாளர் கேஎல்ஏ. ஆரிய கீர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கைத்தொழில், முயற்சியாண்மை, தேசிய மற்றும் சர்வதேச சந்தை வாய்ப்புக்கள், தொழிற்சந்தை மற்றும் மாணவர்களின் எதிர் காலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை விரிவாக உரையாற்றியதோடு பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்டங்களையும் தெரிவு செய்து வழிப்படுத்தினர்.



வேலைத்திட்டத்தில் மாணவர்கள் கலந்து பயனடைந்தார்கள்.

இதன்போது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உத்தியோகத்தர்களான ஐஎல்எம். சப்ரீ, எஸ். அபேரத்ன மற்றும் எம் ஏ எம். முர்ஷித் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

வலயத்துக்கு ஒரு பாடசாலை தெரிவு செய்யப்பட்டு இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(அ)

# புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி இன்று ஆரம்பம்!

காரைதீவு, நவ. 16

இலங்கை அதிபர் சேவை தர மூன்றுக்கு தெரிவான புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி இன்று 16 ஆம் தேதி வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் ஆரம்பமாகின்றது.

கல்முனை மற்றும் சம்மாந்துறை வலய புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி நிந்தவூர் அல் அஸ்றக் தேசிய பாடசாலை ஹாசிம் மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.


இன்று 16ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை இப்பயிற்சி நடைபெற இருக்கிறது.

காலை எட்டு மணி முதல் மாலை ஐந்து மணி வரை இந்த பயிற்சி தொடர்ச்சியாக வழங்கப்பட இருக்கின்றது .

இதேவேளை, திருக்கோவில் மற்றும் அக்கரைப்பற்று வலய புதிய அதிபர்களுக்கான சேவை முன் பயிற்சி அக்கரைப்பற்று முஸ்லிம் தேசிய பாடசாலையில் நடைபெற இருக்கிறது குறிப்பிடத்தக்கது.

(அ)

# 6 ஆண்டுகளுக்கு பின் அமெ. செல்கின்றார் சீன ஜனாதிபதி!



நியூயோர்க், நவ. 16

6 ஆண்டுகளுக்கு பின்னர் தனது முதல் பயணமாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

21 உறுப்பினர்களைக் கொண்ட ஆசிய - பசிபிக் பொருளாதார ஒத்துழைப்பு கூட்டத்தின் ஒருபகுதி யாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு இடையில் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இரு நாடுகளும் விரிசல் அடைந்த உறவுகளை மீட்டெடுக்கும் முகமாக சீன ஜனாதிபதி ஆறு ஆண்டுகளுக் குப் பிறகு அமெரிக்காவிற்கு முதல் முறையாக விஜயம் மேற்கொண் டுள்ளார்.

இந்தச் சந்திப்பு குறித்த மேலதிக தகவல்களை உரிய நேரத்தில் சீன வெளிவிவகார அமைச்சு வெளி யிடும் என வொஷிங்டனில் உள்ள சீனத் தூதரகம் கூறியுள்ளது.

வர்த்தகம், தாய்வான் மற்றும் மத்திய கிழக்கு நெருக்கடி போன்ற பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப் பில் பேசப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இதேநேரம் இருதரப்பு பேச்சுவார்த்தையில் தனது இலக்கு பெய்ஜிங்குடன் இராணுவம் தொடர்புகள் உட்பட சாதாரண தொடர்புகளை மீட்டெடுப்பதே நோக்கம் என அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடன் கூறியிருந்தார்.

பிரான்சிஸ்கோவிற்குச் செல்வ தற்கு முன்பு வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சீனாவுடன் நல்லுறவை பேணுவதே முக்கிய குறிக்கோள் என்றும் தெரி வித்திருந்தார்.

வர்த்தகம் முதல் மனித உரிமை கள் மற்றும் கொரோனா தொற்று தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான பதட்டங்கள் அதி கரித்த நிலையில் இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இறுதியாக 2017ஆம் ஆண்டு அமெரிக்காவிற்கு பயணம் மேற் கொண்டு அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சீன ஜனா திபதி சந்தித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

(அ)



## உலகத்தின் அமைதிக்காக சகலரும் இணையவேண்டும்

### கனேடிய பிரதமர் கோரிக்கை

ஒட்டாவா, நவ. 16

இஸ்ரேலிய தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் உயிரிழப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்க பதிவொன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் போராளிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது இதனைத் தொடர்ந்து காசா பகுதியில் ஹமாஸ் தீவிரவாதிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் தற்போது தாக்குதல் நடத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் குறித்த தாக்குதலை நிறுத்துவது குறித்து அனைத்து தலைவர்களும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் உலகத்தின் அமைதிக்காக அனைவரும் ஒண்றினைய வேண்டும் என்றும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# 300 அடி பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்து!

### 38 பேர் பலி, 17 பேர் படுகாயம்

புதுடில்லி, நவ. 16

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் 300 அடி பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்திற் குள் ளானதில் 38 பேர் உயிரிழந்துள்ள துடன், 17 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தோடாவில் பகுதியில் உள்ள படோடே- கிஷ்ட்வார் தேசிய நெடுஞ் சாலையில் துருங்கல் - அசார் எனும் இடம் அருகே 300 அடி பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்துள்ளது.



விபத்து குறித்து தகவல் அறிந்த மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந் துள்ளனர்.

அவர்கள் 38 பேரின் சடலங்களை மீட்டுள் ளனர். 17 பேர் படுகா யங்களுடன் மீட்கப் பட்டு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

(அ)



# யேமன் அருகே படகு விபத்து!

### 49 பேர் மாயம்!!

யேமன் அருகே அகதிகள் பயணித்த படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளா னதில் அதிலிருந்த 49 பேரைக் காணவில் லையென சர்வதேச செய்திகள் தெரிவிக் கின்றன.

குறித்த படகு 75 பேருடன் சென்று கொண்டிருந்த போது வேகமாக வீசிய காற்றில் நிலைகுலைந்து அதிலிருந்த வர்கள் கடலுக்குள் விழுந்ததாகக் கூறப் படுகிறது.

விபத்துப் பகுதியிலிருந்து 26 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 49 பேரும் காணாமல் போயுள்ள தாக யேமன் கடலோரக் காவல்படை யினர் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# உத்தரகண்டில் மூன்று நாட்களாக சுரங்கப்பாதையில் சிக்கிய 40 பேர்!

புதுடில்லி, நவ. 16

இந்தியாவின் உத்தரகண்ட் மாநிலத் தில் சுரங்கப்பாதை அமைக்கும் திட்டத் தில் ஈடுபட்டிருந்த போது, மண்சரிவு ஏற்பட்டதால் 40 தொழிலாளர்கள் சுரங் கத்திற்குள் சிக்கியுள்ளனர்.

அவர்கள் சுரங்கத்திற்குள் சிக்கி 72 மணித்தியாலங்கள் கடந்துவிட்ட போதி லும், அவர்களில் எவரும் இதுவரை மீட்கப்படவில்லை.

இதனால், சுரங்கத்திற்கு வெளியில் அவர்களின் உறவினர்கள் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளனர்.

உத்தரகண்ட் மாநிலத்தின் உத்தரகாசி மாவட்டத்தின் யமுனோத்ரி தேசிய நெடுஞ்சாலையில் சில்க்யாரா, தண்டல் கான் பகுதிகளுக்கு இடையே சுரங்கப் பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

அந்தப் பாதையின் ஒரு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மண் சரிவு ஏற்பட்டது. இதனால் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டு வந்த சுரங்கப் பாதை சரிந்து விபத்திற்குள்ளானது. பாதை சரிந்து இடிபாடுகள் குறுக்கில் இருப்பதால், அவற்றின் பின்னால் 40 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டு வெளி யேற முடியாமல் தவித்து வருகின்றனர். சரிவுக்குள்ளான பகுதி 30 மீற்றர் நீளமா னது என்று உத்தரகண்ட் மாநில அவசர கால செயல்பாட்டு மையம் தெரிவித் துள்ளது.

வெளிவரும் பாதையை தயார் செய்வதற்காக இயந்திரங்களை பயன் படுத்தி இடிபாடுகளை துளையிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், நேற்று மாலை அந்த இயந்தி ரங்களும் சிக்கிக்கொண்டதால், அப்பணி இடைநிறுத்தப்பட்டது.



இந்நிலையில், தொழிலாளர்களை மீட்பதற்கு மீட்புப் படையினரிடம் மாற்றுத் திட்டங்கள் இல்லை என போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், போர்க்கால அடிப் படையில் மீட்பு பணிகள் விரைந்து முன் னெடுக்கப்பட்டு வருவதாகவும் இராட் சத இயந்திரங்களை பயன்படுத்தி, இடி பாடுகளை அகற்றி வருவதாகவும் உத்தர கண்ட் மாநில பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளே சிக்கி இருப்பவர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர்கள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்படு வார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

பாதையில் உள்ள இடிபாடுகளை அகற்றினாலும், மேலிருந்து அதிகளவில் மண்சரிவு ஏற்படுவதால் மீட்பு பணிகள் தாமதமாகி வருகின்றன. (அ)

# வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளில் வாகன இறக்குமதி நிவாரணம் இல்லை

## வாகன இறக்குமதியாளர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 16

**வரவு - செலவுத் திட்டத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படவில்லை என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

நாட்டின் டொலர் கையிருப்பு ஓரளவு அதிகரித்துள்ள நிலையில், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான வசதிகளை மேற்கொள்ளுமாறு மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நிதி அமைச்சிடம் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

இதன்படி, இம்முறை வரவு -செலவுத் திட்டத்தில் வாகன இறக்குமதிக்கான தடை தளர்த்தப்படும் என வாகன இறக்குமதியாளர்கள் எதிர்பார்த்த போதிலும் தமக்கு எவ்வித நிவாரணமும் கிடைக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

கடந்த நான்கு வருடங்களாக வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாமையால் பாவனையாளர்கள் மற்றும் வாகன இறக்குமதியாளர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்தார்.

இதன் காரணமாக 400,000 இற்கும் அதிகமானோர் வேலையிழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வரவு-செலவுத் திட்டத்திற்குப் பின்னர் அல்லது கட்டுப்பாடுகளுடன் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குமாறும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செயலாளர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# வாளால் வெட்டப்பட்டார் தனியார் பஸ் நடத்துநர்!

கொழும்பு, நவ. 16

களுத்துறை நகரின் மையப் பகுதியில் நூற்றுக்கணக்கான மக்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போது ஒருவரை வாளால் வெட்டிய நபரை தேடி விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்டவர் நகர மையத்தில் இரத்த வெள்ளத்தில் கிடந்த நிலையில் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவரது கைகளிலும் முதுகிலும் மூன்று காயங்கள் ஏற்பட்டதாகவும், அவரது நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் வைத்தியசாலைப் பேச்சாளர் தெரிவித்தார்.

பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தத் தாக்குதல் இடம்பெற்ற நிலையில் காயமடைந்தவர் அங்கிருந்த மாவட்ட செயலாளர் அலுவலகம் நோக்கி ஓடும்போது வீதியில் கீழே வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலுக்கு உள்ளானவர் வஸ்கடுவ பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை எனவும், அவர் தொழில் ரீதியாக தனியார் பஸ் நடத்துநர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தலவாக்கலையில் இளைஞன் ஆயுதத்தால் தாக்கி கொலை!

கொழும்பு, நவ. 16

முச்சக்கரவண்டியில் பயணித்த இரு இளைஞர்கள் மீது மற்றுமொரு முச்சக்கர வண்டியில் வந்த சிலர் கூரிய ஆயுதங்களால் தாக்கியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தலவாக்கலை ஹெலிரூட் தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்ற தாக்குதலில் படுகாயமடைந்த இரு இளைஞர்கள் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் 22 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த மற்றைய இளைஞர் 23 வயதுடையவர் என்பதுடன் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவருக்கும் சந்தேக நபர்களுக்கும் இடையில் காணப்பட்ட முன்விரோதம் காரணமாக இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட தலவாக்கலை பொலிஸார் 04 சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்களர் 21, 23 மற்றும் 24 வயதுடையவர்கள் எனவும், வடகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்களில் இருவர் வெட்டுக்காயங்கள் காரணமாக நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் லிந்துலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், நீதவான் விசாரணைகளும் பிரேத பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சர்வதேச விசாரணையே தேவை நிதி எங்களுக்கு தேவையில்லை

முல்லைத்தீவு, நவ. 16

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பாதீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விடயத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர் சர்வதேச விசாரணையே எமக்கு தேவை எனவும் நிதி கோரி நாம் போராடவில்லை எனவும் நிதி எமக்கு தேவையில்லை எனவும் நீதியே வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளை தேடி சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாக தாம் தொடர்ச்சியாக




போராடி வருகிறோம். இலங்கை அரசின் மீது நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணை ஒன்றே தேவை என கூறியே தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுத்து வருகிறோம். சர்வதேச சமூகத்தின் பார்வையில் எங்களுடைய போராட்டம் பேசு பொருளாக மாறி உள்ள நிலையில் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் விதமாக பட்ஜெட்டில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக நிதி ஒதுக்கப்பட்ட விடயத்துக்கு கண்டனம் தெரிவிக்கிறோம்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளாகிய நாம் தொடர்ச்சியாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்காகவே போராடி வருகின்றோம். இருப்பினும் எங்களுடைய கோரிக்கைகளை செவிசாய்க்காது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற ஓ.எம்.பியின் செயற்பாடு உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்பை தெரிவித்திருந்தபோதும் எங்களுடைய எதிர்ப்பை மீறியும் அதற்காக பாரிய நிதிகளை ஒதுக்கி வீணாகச் செலவழித்துள்ளது.

இந்த இழப்பீட்டுக்கான நிதி ஒதுக்கலின் ஊடாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இருக்கிறார்கள் என்ற விடயத்தை ஒத்துக்கொண்டமை நல்ல விடயம். எமக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடாக எங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கான நீதியே தேவை எனவும் நிதி தேவையில்லை- என்றார். (அ)

# உயிரிழந்த தந்தையின் மரணச் சான்றிதழை பெறச் சென்ற மகன் விபத்தில் சிக்கி மரணம்!

கொழும்பு, நவ. 16

இறுதிக் கிரியைகளுக்காக உயிரிழந்த தனது தந்தையின் மரணச் சான்றிதழை உரிய அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளச் சென்றுகொண்டிருந்த மகன் புளத்சிங்கல பஹல நாரகல பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் சென்ற ரந்திக பியூமல் கமகே என்ற 21 வயது இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த தனது தந்தையின் மரணச் சான்றிதழை அவசர, அவசரமாக பெற்றுக் கொள்வதற்காக புலத்சிங்களவிலிருந்து ஹொரணைக்கு பயணித்துள்ளார்.

இவ்வாறு பயணித்தபோது பள்ளத்தாக்கு ஒன்றுக்கு அருகில் உள்ள வளைவில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகில் இருந்த மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக புலத்சிங்கள பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரும் காயமடைந்து ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# 2024 சவாலாக இருக்கும்!

## கூறுகிறார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, நவ. 16

2024ஆம் ஆண்டின் முதல் சில மாதங்கள் சவாலானதாக இருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதன் பின்னர், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியுடன் இலங்கை முழுமையான பொருளாதார மீட்சியை நோக்கிச் செல்லும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டு இலங்கை நிலைமைக்கு திரும்பவில்லை என்றும், 2024 ஆம் ஆண்டிலும் இந்த நிலை ஏற்படாது என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். 2025 இல் அதை அடைவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாகவும், இவை பொருளாதார மீட்சியை உறுதி செய்வதற்கான படிக்கட்டுகள் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி பின்னடைவுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தனது முதன்மை நோக்கம் என்பதை எடுத்துக்காட்டி, இந்த இலக்கை அடைவதற்கு அரசியல் சாராத அணுகுமுறையை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். (அ)

# டெங்கு தொற்று தொடர்ந்தும் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 16

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையினால் டெங்கு தொற்றுப் பரவல் தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் நவம்பர் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில், 3 ஆயிரத்து 63 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலும், மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டிலுள்ள 44 சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளில் அதி டெங்கு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அப்பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை இனங்கண்டு, அவற்றை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு பொது மக்களைக் கேட்டுள்ளது. (அ)

## நெடுந்தீவில்....

வைக்கப்பட்டிருந்தன.

காவல்துறை புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய அந்த பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள நெடுந்தீவு காவல்துறையினர், ஊர்காவற் துறை நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றனர்.

அகழ்வு இயந்திரத்தின் உதவியுடன் காவல்துறையினர், விசேட அதிரடிப் படையினர் இணைந்து நடத்திய தேடுத லில் ரி-56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத் தப்படும் 750ற்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சீரற்ற காலநிலை காரணமாக தேடு தல் நடவடிக்கை தொடர்ந்து மேற் கொள்ள முடியாத நிலையில் இடை நிறுத்தப்பட்டதாக பொலிஸார் தெரி வித்தனர். (அ)

## நெருக்கடிக்கு....

அர்த்தமில்லை. ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் கொழும்பை பிரதிநிதித்துவப்படுத்துவதால் கொழும் புக்கு நிவாரணம் கிடைத்திருக்கலாம்.

எவ்வாறாயினும், இந்த வருட வரவு - செலவுத் திட்டத்தில் கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள பல விடயங் கள் உள்ளடக்கப்பட்டுள்ளதால், முன் னைய வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக இருந்தமையால் அதனை எதிர்க்க முடியவில்லை.

ஆனால், கடந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட முன் மொழிவுகளை நடைமுறைப்படுத்தாமல் மீண்டும் அவற்றை சமர்ப்பிப்பது நியாய மானதா என்பதில் சிக்கல் இருக்கிறது." - என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

## 2024ஆம்....

காட்டியுள்ளது.

2024 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத் தின் வருமான இலக்குகளை எட்டுவது சவாலானது எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

வருமான இலக்குகளை அடைய பெறுமதிசேர் வரியை 18 சதவீதமாக அதிகரித்ததன் மூலம் பொருட்களின் விலை 8.7 வீதம் அதிகரிக்கலாம் எனவும் பிட்ச் ரேட்டிங் நிறுவனம் கணித்துள் ளது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதி தேர்த லுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செலவுகளை 14 வீதத்தால் அதிகரிக்கும் நோக்கில் சம்பளம் , கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் , வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட் டுள்ள மூலதனச் செலவுகள் குறைக் கப்படலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

எதிர்பார்க்கப்படும் 3.3% பொரு ளாதார வளர்ச்சி வேகம் நிச்சயமற்றது எனவும் பிட்ச் ரேட்டிங் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## கோப்....

வலியுறுத்திய எதிர்க் கட்சி தலைவர், கோப் குழுவின் தலைவரின் செயற்பாடு கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களின் உரிமைகளை மீறும் வகையில் அமைந் துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்த கோப் குழுவின் தலைவர் ரஞ்சித் பண் டார, ஒரு தடவையில் கருத்து வெளி யிட ஒருவருக்கு மாத்திரமே தாம் சமிக்ஞை செய்ததாக குறிப்பிட்டார்.

இந்த சம்பவங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே சாட்சி என வும் ரஞ்சித் பண்டார இந்த விடயத்தை அரசியல் மயமாக்குவதை தவிர்க்குமாறு எதிர்க்கட்சிகளை கோரியுள்ளார்.

அத்துடன், அரசியல் தலையீடுகள் அற்ற ஒரு சுயாதீனமான குழுவாக கோப் குழு செயல்பட அனுமதிக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகளை அவர் வலியு றுத்தியுள்ளார். (அ)

## மருத்துவர்கள்....

குற்றவியல் விசாரணை திணைக்களத்தி னால் குறைந்தபட்சம் வெளிநாடு செல்பவர்களின் பெயர்பட்டியலை விமான நிலையத்திற்கு வழங்கி குறித்த நடவடிக்கையினை தடுக்க முடியாமல் போனது ஏன் எனவும் அவர் இதன் போது கேள்வி எழுப்பினார்.

வைத்தியர் ஒருவர் இன்று நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், ஏனையவர்கள் எதிர்வரும் நாட்களில் நாட்டைவிட்டு வெளியேறவுள்ளதன் காரணமாக இந்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் எனவும் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தி னார்.

மேலும், தேசிய மருந்துகள் ஒழுங்கு படுத்தல் அதிகாரசபையில் பணியாற்றிய வர்கள் பாரியளவில் பணம் சம்பாதித் துள்ளதுடன், பிரித்தானியாவில் வீடு மற்றும் வாகனம் போன்றவற்றை கொள் வனவு செய்துள்ளதாக அறியமுடிவ தாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மருந்து மோசடியில் ஈடுபட்டவர் களை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு போதிலும், கைது செய்வதற்கு நாட்டில் எவரும் இல்லை எனவும் தயாசிறி குறிப்பிட்டார்.

இதன்படி, மோசடியில் ஈடுபட்ட வர்கள் நாட்டைவிட்டு வெளியேற அப்பாவிகள் பாதிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதக்கவும், அவர்களின் எதிர்காலத்திற்கு எவரும் பொறுப்புக்கூறப்போவதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் அனைத்து தரப்பினரும் கூடுதல் கவனம் செலுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேட்டுக்கொண்டார். (அ)

## பதுக்கி....

கிலோகிராம் சீனிக்கான வரி25 சதத்தில் இருந்து 50 ரூபாவாக அதிகரிக்கப்பட் டது.

பேலியாகொடையில் உள்ள களஞ்சியசாலையொன்றில் இருந்தே 270 மெற்றிக்தொன் சீனியை அதிகாரிகள் மீட்டுள்ளதுடன் குறித்து களஞ்சிய சாலைக்கும் சீல் வைத்தனர்.

இதேவேளை, அதிகரித்த விலையில் சீனியை விற்பனைசெய்த கிராண்ட்பாஸ ில் உள்ள வர்த்தக நிலையமொன்றில் இருந்தும் 5 மெற்றிக் தொன் சீனியை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில், சீனியை அதிகரித்த விலையில் விற்பனை செய்த சுமார் 300 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## தகுதியற்ற....

அவர் மேலும் கருத்து வெளியிடு கையில்,

பாராளுமன்ற தரநிலை சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படும். இந்த சட்டமூலம் தொடர் பான விளக்கத்தை பிரதமர் தினேஸ் குணவர்தன கட்சித் தலைவர்களுக்கு வழங்க உள்ளார். அதற்காக விசேட கட்சித் தலைவர் கூட்டமொன்றும் நடத்தப்படும்.

கட்சித் தலைவர்களுடன் பிரதமர் நடத்தும் கலந்துரையாடலின் பின் சட்டமூலத்தில் தேவையான திருத்தங் கள் செய்யப்படும்.

எந்தவொரு பாராளுமன்ற உறுப்பி னரையும் சபையில் இருந்து வெளி யேற்றுவதற்கு முடியாத வகையில் சோல்பரி யாப்பில் உருவாக்கப்பட்ட விதிகள்தான் இன்னமும் பின்பற்றப்படு கின்றன.

இந்தச் சட்டமூலத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளை நீதிமன்றங்களும் வழங்கியுள்ளன- என்றார். (அ)

# கடமைகளில் இருந்து விலகியுள்ள பொதுச்சுகாதார பரிசோதகர்கள்!

கொழும்பு, நவ. 16

டெங்கு கட்டுப்பாட்டு கடமைகளில் இருந்து விலகியுள்ளதாக பொதுச் சுகா தாரப் பரிசோதகர்கள் அறிவித்துள்ளனர்.

போக்குவரத்துக் கொடுப்பனவுகளை அதிகரிக்காமை உள்ளிட்ட பல்வேறு தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுமாறு கோரிக்கை விடுத்தே அவர் கள் கடமையில் இருந்து விலகியுள்ளனர்.

இலங்கை பொது சுகாதார பரிசோ தகர்கள் சங்கத்தின் செயலாளர் திரு.ஷ ானக போபிட்டிய கடந்த 23 ஆம் திகதி முதல் இந்த பிரச்னைக்கு தீர்வு கோரி பல்வேறு தொழிற்சங்க நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ)

# அரிய வகை வலம்புரி சங்குடன் இளைஞர் கைது!

கொழும்பு, நவ. 16

5 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்ய தயாராக இருந்த அரிய வகை வலம்புரி சங்குடன் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளதாக பேருவளை பொலி ஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் தியத்தலாவ கஹம்பிலிய புதிய கிராமத்தைச் சேர்ந்த 22 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் வலம்புரி சங்கை வேறு ஒருவருக்கு விற்பனை செய்ய தயாராகி வருவதாக விமானப்படை புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸாருடன் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப் பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள் ளார். சந்தேக நபர் களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (அ)

# ரயில் ஊழியர்கள் ஐவர் பணி இடைநிறுத்தம்

கொழும்பு, நவ. 16

அநுராதபுரம் ரயில் நிலையத்தின் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட 5 ரயில் ஊழியர்களை பணி இடைநிறுத்தம் செய்ய ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத் துள்ளது.

ரயில் நிலையத்தில் 545 லீற்றர் டீசல் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் இவர்கள் பணி இடைநிறுத்தப்பட்டுள்ள தாக புகையிரத பொது முகாமையாளர் எச்.எம்.கே. டபிள்யூ. பண்டார குறிப் பிட்டார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி இந்த டீசல் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இது தொடர் பில் விசாரணை நடத்துவதற்கு ரயில்வே பொது முகாமையாளரால் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

குறித்த குழு சமர்ப்பித்த அறிக் கையை கருத்திற் கொண்டு அநுராதபுரம் ரயில் நிலையத்தின் பாதுகாப்பு பிரி வுக்கு பொறுப்பான அதிகாரி உட்பட 5 ரயில் ஊழியர்களை பணி இடைநிறுத் தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

டீசல் திருட்டு தொடர்பிலான விசாரணைகள் முடியும் வரை அவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்படுவதா கவும், அநுராதபுரம் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருவ தாகவும் ரயில்வே திணைக்களம் தெரி வித்துள்ளது. (அ)

## விலங்குகள்....

மஹரகம இளைஞர் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கார்த்திகை வீரர்கள் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நமது நாடு முற்றிலும் அரசியல் சுரண்டலுக்கு பலியாகி வருகிறது. இதற்கான வலுவான அடித்தளத்தை யிட்டது 1977ல் ஆட்சிக்கு வந்தது ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசாங்க மாகும். தேசிய மக்கள் சக்தி இந்த அழி வுப் போக்கிற்கு எதிராக பொது சமூகத் தின் சுதந்திரத்திற்காக அச்சமின்றி இயங்கி வந்தது.

1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி, பொது மக்களின் வழிகாட்டு தலில்தான் ஜே.வி.பி கட்டியெழுப்பப் பட்டது. ஆனால், எமது கட்சியின் ஸ்தாபகரான ரோஹன விஜேவீர உட் பட பெருமளவிலான தோழர்கள் கொல் லப்பட்டனர். ஜே.ஆர் ஜெயவர்த்தன தான் இந்த கலாசாரத்தை தொடக்கி வைத்தார்.

ஒரு மாற்றத்திற்காக சந்திரிகாவை கொண்டுவந்தார்கள். மாற்றத்திற்காக கொண்டுவரப்பட்ட எந்தவொரு தலை வரும் மாற்றத்தை கொண்டு வரவில்லை.

உலகில் எங்காவது மோசடி மற்றும் ஊழல் பற்றிய விடயங்கள் அம்பலப் படுத்தப்பட்டால், அதில் தற்போது இலங்கையின் பங்குதாரர்களும் இருக் கும் இடத்திற்கு நாடு தள்ளப் பட்டுள் ளது." என்றும் அவர் வலியுறுத்தியுள் ளார். (அ)

# யானை தாக்கியதில் குடும்பப் பெண் பலி!

கொழும்பு, நவ. 16

ஹிங்குராக்கொட, யுத்கனாவ பலு வேவ இத்மத்தவில் நேற்றுக் காலை காட்டு யானை தாக்கியதில் மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழந்துள்ளதாக ஹிங்குராக்கொட பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பி.எம்.சந்திரசிறி மல்கந்தி என்ற 60 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹிகுராக்கொட பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் பணிபுரியும் குறித்த பெண், காலை 6.00 மணியளவில் தனது வீட்டிலிருந்து ஹோட்டலுக்குச் சென்று கொண்டிருந்த போது பலுவெவக்கு முன்பாக காட்டு யானை தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். (அ)

## பாடசாலை....

குறித்த பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வி பயின்றுவந்த மாணவி ஒருவரே உயிரிழந்துள்ளதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் மேலும் 6 மாணவர் கள் காயமடைந்துள்ள நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒரு மாணவனின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

குறித்த சுவர் 15 ஆண்டுகளுக்கு முன்னதாக கட்டப்பட்டது என தெரி விக்கப்படுகிறது. (அ)

ஈழநாடு
Eelanadu

# சீரற்ற காலநிலை தொடர்வதனால் யாழ்.மாவட்டத்தில் 2,910 பேர் பாதிப்பு!

யாழ்ப்பாணம், நவம்பர் 16

**சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 850 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 910 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.**

அதிகபட்சமாக சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் 279 குடும்பங்களை சேர்ந்த 950 பேரும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 234 குடும்பங்களை சேர்ந்த 766 பேரும், கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் 180 குடும்பங்களை சேர்ந்த 630 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 58 குடும்பங்களை சேர்ந்த 204 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 54 குடும்பங் களை சேர்ந்த 191 பேரும், பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு சீரற்ற காலநிலையால் யாழ் மாவட்டத்தில் 20 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3)

# தரமற்ற மருந்துகளை வழங்கும் நிறுவனங்களை கறுப்பு பட்டியலில் சேர்க்கும் சுகாதார அமைச்சு

கொழும்பு, நவ. 16

உரிய ஒப்பந்தங்கள் இல்லாத நிறுவனங்களையும் தரமற்ற மருந்துகளை வழங்கும் நிறுவனங்களையும் கறுப்புப் பட்டியலில் சேர்க்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகள் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் அரச மருந்தக கூட்டுத்தாபனம் மற்றும் ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை உள்ளிட்ட நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் விலை நிர்ணயக் குழு ஒன்றின் ஊடாக மருந்து விலையை தீர்மானிக்குமாறு இதன்போது பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாட்டில் மருந்து தட்டுப்பாடு ஏற்படாத வகையில் தேவையான மருந்துகளை சரியான முறைகளில் இறக்குமதி செய்ய இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சிறிங்கா கிரிக்கெட் கொடுக்கல் வாங்கல் அனைத்தும் அரசின் கொள்முதல் திட்டத்துக்கு உட்பட்டே நடந்தன

## கோப் குழுவில் தெரிவித்தார் ஷம்மி சில்வா

கொழும்பு, நவ. 16

சிறிலங்கா கிரிக்கெட்டின் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் அரசாங்கத்தின் கொள்முதல் திட்டத்திற்கு உட்பட்டே இடம்பெற்றதாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா கோப் குழுவில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா ககிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரிகள் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இருபதுக்கு 20 கிரிக்கெட் போட்டி தொடர்பாக அவர்களிடம் பிரதானமாக கேள்வி எழுப்பப்பட்டது.

இந்தத் தொடரின்போது செலவிடப்பட்ட நிதி குறித்து கணக்காய்வாளர் நாயகம் கேள்வி எழுப்பியிருந்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சரின் ஒப்புதல் இன்றி குறித்த நிதி பயன்படுத்தப்பட்டுள்ளதா? எனவும் கோப் குழுவின் அதிகாரிகள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அத்தோடு, சிறிலங்கா கிரிக்கெட் சபை ஈட்டிய இலாபத்தில் வீரர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை உள்ளிட்ட விபரங்கள் தொடர்பாகவும் வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த கிரிக்கெட் சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஹேஸ்லி டி சில்வா, குறித்த நிதியின் 25 வீதம் தேசிய கிரிக்கெட் அணிக்காக செலவிடப்படுவதாக தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து கருத்துரைத்த இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா, அரசாங்கத்திடம் இருந்து ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபைக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை எனவும் சகல நிதியும் சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் இருந்தே கிடைப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இதன்படி, தனியார் நிறுவனம் ஒன்றை போன்றே சிறிலங்கா கிரிக்கெட் சபையின் செலவீனங்கள் இடம்பெறுவதாகவும் ஷம்மி சில்வா குறிப்பிட்டுள்ளார். (அ)

# நிதி அமைச்சின் செயலருக்கு எதிரான மனுக்கள் நிராகரிப்பு

கொழும்பு, நவ. 16

2023 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை தடுப்பதை நிறுத்தி பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவுக்கு அமையச் செயற்படத் தவறியதன் மூலம் நீதிமன்றத்தை அவமதித்த தாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு மனுக்களை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வால் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் இந்த மனுக்களை தாக்கல் செய்தனர்.

உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைத்ததற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை விசாரணைக்கு ஏற்ற உயர் நீதிமன்றம், 2023ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் ஊடாக உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியைத் தடுத்துவைப்பதைத் நிறுத்தி கடந்த மார்ச் மாதம் 03 ஆம் திகதி அன்று நிதியமைச்சின் செயலாளருக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இடைக்கால உத்தரவை நிதியமைச்சின் செயலாளர் வேண்டுமென்றே நிறைவேற்ற தவறியுள்ளதாகவும் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள் தொடர்பில் ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்த நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர், இது பொது நிதி தொடர்பான விடயம் என நீதிமன்றில் குறிப்பிட்டுள்ளனர்.

நிதிக் கட்டுப்பாடு என்பது பாராளுமன்ற விடயதானத்திற்கு உட்பட்ட செயற்பாடு என்பதால் அதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்றும் முதற்கட்ட ஆட்சேபனைகள் தெரிவிக்கின்றன.

எனவே இது தொடர்பான மனுக்களை நிராகரிக்க வேண்டும் என நிதியமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் நீதிமன்றத்தில் பூர்வாங்க ஆட்சேபனைகளில் முன்வைத்துள்ளதாக குறிப்பிட்டார். தீர்ப்பை அறிவித்த 5 பேர் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு, பிரதிவாதிகள் முன்வைத்த அடிப்படை ஆட்சேபனைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறியது.

அதன்படி, இது தொடர்பான மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுவதாக உயர் நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு அடுத்த வாரம்!

கொழும்பு, நவ. 16

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியாகும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 337,591 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்கள்.

நாடளாவிய ரீதியில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி 2,888 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெற்றது. (அ)

# கடந்த 24 மணித்தியாலத்தில் 55.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், நவ. 16

யாழ்.மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் 55.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல்கள் நேற்று தெரிவித்தன.

கடந்த 24 மணி நேரத்தில் யாழ். மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. யாழ்.மாவட்டத்தில் சராசரியாக குறித்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. எனினும் தொல்புரம் பகுதியில் அதிஉச்ச மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. வளிமண்டலவியல் திணைக்களத் தரவுகளின்படி தொல்புரம் பகுதியில் 119 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பி.ப. 02 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மற்றும் தென் மாகாணங்களின் கரையோரப் பிரதேசங்களில் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்பு ளும் புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளும் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு கடும் அழுத்தம்!

## நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்



கொழும்பு, நவ. 16

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அதிக நெருக்கடியை கொடுப்பதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.எம்.எப் நிபந்தனைகளின் காரணமாகவே மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தின் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# சிறிலங்கா கிரிக்கெட்டின் தற்போதைய நிலையின் பின்னணியில் பாரிய சதி!



நீண்ட காலமாக பல்வேறு மட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் பலதரப்பட்ட சதித்திட்டங்களின் விளைவாகவே இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு தற்போதைய நிலைமையை எதிர்நோக்கியுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தெரிவுக்குழு தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சதித்திட்டத்தின் பின்னணியில் சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரத்தைக் கைப்பற்ற சண்டையிடுபவர்களும் ஆட்ட நிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ள தரகர்களும் தேசிய அணியில் தமது இடத்தை உறுதிசெய்ய போராடுபவர்களும் இருப்பதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அவர்கள் சமூக ஊடகங்களை தமது வழிமுறையாகப் பயன்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய நோக்கங்களுக்காக தேசிய அணியின் இருப்பை சீர்குலைக்க முயற்சிப்பவர்களுக்கான பின்புலம் புதிய விளையாட்டுத்துறை அமைச்சரின் நியமனத்தின் பின்னரே ஏற்படுத்தப்பட்டதாக, சிறிலங்கா கிரிக்கெட் தெரிவுக்குழு தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்க தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழுவிற்கு முன்னைய விளையாட்டுத்துறை அமைச்சர்களின் ஆதரவு இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த 5 வருடங்களில் நாட்டிற்கு வெற்றியைத் தேடித்தரக்கூடிய அணியைத் தயார்ப்படுத்துவதே தெரிவுக் குழுவின் முயற்சியாக இருந்ததாகவும் அதற்காக அதிகபட்ச முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சும் அதனை நிராகரித்ததாகவும் பிரமோத்ய விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

சில சந்தர்ப்பங்களில் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் தீர்மானங்களை, அமைச்சின் கீழ் இயங்கிய குழு அங்கீகரிப்பதில்லை என சமூக ஊடகங்களில் அவர்கள் வெளியிடும் கருத்துகளின் ஊடாக வெளிப்பட்டுள்ளதாகவும் இதனூடாக தெரிவுக்குழு தொடர்பில் சமூகத்தில் காணப்பட்ட நம்பிக்கை வீழ்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சிரேஷ்ட வீரர்களை அணிக்குள் உள்வாங்காமையை அடிப்படையாகக் கொண்டே அவர்கள் இவ்வாறு தெரிவுக்குழுவை விமர்சித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் தொடர்பில் வெளியிடப்பட்ட குசல சரோஜினி அறிக்கையின் மூலம் தெரிவுக்குழு கடும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்ததாகவும் இரண்டாவது அழுத்தம் பாராளுமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்டதாகவும் பிரமோத்ய விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

தனிநபர்களின் குறுகிய இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, தெரிவுக்குழு பலியாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிரிக்கெட் விளையாட்டின் எழுச்சி அல்லது வீழ்ச்சியைத் தீர்மானிக்கும் சந்தர்ப்பமே தற்போது உருவாகியுள்ளதாகவும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே தற்போதைய தேவையாகும் எனவும் சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தெரிவுக்குழு தலைவர் பிரமோதய விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இது கிரிக்கெட் வீரர் அல்லது வீராங்கனைக்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையால் வழங்கப்படும் உயரிய கௌரவமாகும்.



# ஜோகோவிச்சை தனது சொந்த மண்ணில் வீழ்த்தினார் சின்னர் !

உலகின் முதல்நிலை வீரரான நோவக் ஜோகோவிச்சை தனது சொந்த மண்ணில் வீழ்த்தி இத்தாலி வீரர் ஜொனிக் சின்னர் வெற்றிபெற்றுள்ளார்.

உலக டென்னிஸ் தர வரிசையில் முதல் 8 இடங்களில் இருக்கும் வீரர்கள் பங்கேற்ற ஏடிபி பைனல்ஸ் தொடர் இத்தாலியின் டுரினில் நடைபெற்று வருகின்றது.

அதன்படி உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மற்றும் இத்தாலியின் ஜொனிக் சின்னர் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

மூன்று மணி நேரத்திற்கும் மேலாக இடம்பெற்ற இப்போட்டியில் ஆரம்பத்தில் மிக சிறப்பிக்க விளையாடிய ஜொனிக் சின்னர் முதல் சேட்டை 7-5 என கைப்பற்றி முன்னிலை பெற்றார்.

இதன்பின்னர் சுதாகரித்துக்கொண்ட நோவக் ஜோகோவிச் டை பிரேக் வரை நீடித்த இரண்டாவது செட்டை 7-6 நீ கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

இருவருமே தலா ஒரு செட்டை கைப்பற்றியதால் வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செட் மேலும் விறுவிறுப்பை ஏற்படுத்தியது.

அதன்படி இறுதி செட்டும் டை பிரேக் வரை நீடிக்க அதனை 7-6 என கைப்பற்றிய ஜொனிக் சின்னர், 24 முறை கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டம் வென்ற நோவக் ஜோகோவிச்சிற்கு எதிராக தனது முதல் வெற்றியை பதிவு செய்தார்.

# ஐ.பி.எல் வீரர்கள் ஏலம் அடுத்த மாதம்


இந்தியாவில் நடத்தப்படும் உள்ளூர் டி20 தொடரான ஐபிஎல் 17ஆவது சீசன் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளநிலையில், அதற்கு முன்னதாக சீசனுக்கான வீரர்கள் ஏலம் அடுத்த மாதம் 19-ம் திகதி டுபாயில் நடக்க உள்ளதாக ஐ.பி.எல். அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் விடுவிக்கப்படும் மற்றும் தக்கவைக்கப்படும் வீரர்களின் பட்டியலை வருகிற 26 ஆம் திகதிக்குள் அணி நிர்வாகங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த வருடம் நடைபெற்ற ஐபிஎல் சீசனில் குஜராத்தை தோற்கடித்த தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் 5ஆவது கோப்பையை வென்று அதிக முறை சாம்பியன் பட்டம் வென்ற மும்பையின் சாதனையை சமன் செய்தது.

இந்நிலையில் நடப்பு சாம்பியனான சென்னை அணி ஏலத்திற்கு முன்பாக இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் பென் ஸ்டோக்ஸை விடுவிக்க முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற வீரர்கள் ஏலத்தில் சென்னை நிர்வாகம் ரூ. 16.25 கோடி என்ற பிரம்மாண்ட தொகையில் ஸ்டோக்ஸை வாங்கியது. ஸ்டோக்ஸ் விடுவிக்கப்பட்டால் ரூ.16.25 கோடி சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் கையிருப்பில் சேர்ந்து விடும். அதனை ஏலத்தில் பயன்படுத்தி வேறு சில வீரர்களை வாங்கிக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.






# அரவிந்த டி சில்வாவுக்கு விருது

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் அரவிந்த டி சில்வா சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஹோல் ஒவ் பேம் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டியில் அரவிந்த டி சில்வா சதம் அடித்தார்.

அரவிந்த டி சில்வா இலங்கை அணிக்காக 93 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 6361 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

308 ஒருநாள் போட்டிகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய அரவிந்த டி சில்வா, 9284 ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

# ரோஹித் ஷர்மா சாதனை

சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் 50 சிக்ஸர்களை அடித்த முதல் வீரர் மற்றும் உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் அதிக எண்ணிக்கையிலான சிக்ஸர்களை அடித்த வீரர் என்ற இரண்டு சாதனைகளை இந்திய கிரிக்கெட் அணியின் ரோஹித் ஷர்மா படைத்தார்.

நியூஸிலாந்து அணிக்கு எதிரான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியிலேயே இச்சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன.

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரான கிறிஸ் கெய்ல் 34 இன்னிங்ஸ்களில் 49 சிக்ஸர்களை விளாசியிருந்தமையே உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் அதிக எண்ணிக்கையிலான சிக்ஸர்களை விளாசியவருக்குரிய சாதனையாக இருந்தது. இந்தச் சாதனையயே தற்போது ரோஹித் ஷர்மா முறியடித்துள்ளார்.

ரோஹித் ஷர்மா 27 இன்னிங்ஸ்களில் 51 சிக்ஸர்களை அடித்து முதலிடத்தில் உள்ளதுடன், 50 சிக்ஸர்களை அடித்த முதல் வீரர் என்ற சாதனையும் நிலைநாட்டியுள்ளார். அத்துடன், டெஸ்ட் , சர்வதே ஒருநாள், சர்வதேச இருபதுக்கு 20 ஆகிய மூன்றையும் சேர்த்து ஒட்டு மொத்தமாக அதிக சிக்ஸர்கள் (575) விளாசியவர் என்ற சாதனைக்கும் ரோஹித் ஷர்மாவே சொந்தக்காரராக திகழ்கிறார்.

(அ)



ஜங்கரன் விக்கினேஸ்வரா

# சவூதியில் அவசர அரபு லீக் மாநாடு: இஸ்ரேல் போரை நிறுத்த வழிகோலுமா?





அரபு லீக் பிரதிநிதிகள் இஸ்ரேலுக்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்காமல், இறுதி அறிக்கையின் மீது ஒரு பொது உடன்பாட்டை எட்டத் தவறினர். இதற்கு முக்கிய காரணம் அரபு நாடுகளின் பிராந்திய விரிசல்களும், அமெரிக்க சார்பு நிலைப்பாடே ஆகும்.

ஆயினும் ஒன்றிணைந்த முடிவுகள் சில எடுக்கப்பட்டதாக அரபு இராஜதந்திரிகள் தெரிவித்தனர். அவற்றுள் இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனையை மற்ற நாடுகள் நிறுத்த வேண்டும் என்றும், அதே நேரத்தில், பல நாடுகள் இஸ்ரேலுக்கும் எண்ணெய் விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்றும் கோரினர்,

சில அரபு லீக் நாடுகள் இஸ்ரேலுடன் கொண்டுள்ள பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை துண்டிப்பதன் மூலம் போருக்கு பதிலடி கொடுக்கும் முயற்சி வெற்றி அளிக்கும் எனவும், அரபு நாடுகளில் உள்ள தளங்களில் இருந்து இஸ்ரேலுக்கு அமெரிக்க உபகரணங்களை மாற்றுவதை தடுக்க மிகவும் கடுமையாக இருக்க இந்த மாநாட்டு தீர்மானம் அழைப்பு விடுத்திருக்கிறது.

அதேவேளை இஸ்ரேலுடனான அனைத்து இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளையும் முடக்கவும், 1972 போல எண்ணெய் தடையை இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுக்கவும் இந்த மாநாட்டில் தீர்மானம் விடுத்திருக்கிறது.

அரபு நாடுகளின் வான்வெளியைப் பயன்படுத்தி இஸ்ரேலுக்குச் செல்லும் விமானங்களைத் தடுத்து, போர்நிறுத்தத்திற்கு மேற்கத்திய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தி உள்ளது. அத்துடன் இஸ்ரேல் அணு ஆயுதக் களஞ்சியத்தை பராமரித்து வருவதாக வெளிநாட்டு மதிப்பீடுகள் கூறுகின்றன. ஆனால் இஸ்ரேல் அணு ஆயுதங்களை வைத்திருப்பதை முறையாக ஒப்புக் கொள்ளவில்லை, அதற்கு பதிலாக "அணு தெளிவின்மை" கொள்கையைப் பேணுகிறது என கூறுகிறது.

பாலஸ்தீன போரில் இஸ்ரேல் அதன் குற்றங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்றும், இஸ்ரேலின் கைகளில் உள்ள அணு ஆயுதங்களை அம்பலப்படுத்த வேண்டும் என்றும் அரபு லீக் வலியுறுத்து உள்ளது.

**ஈரான் - சவூதி நட்புறவு:**

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, மார்ச் மாதம் இரு நாடுகளும் உறவுகளை சீர்படுத்திய பின்னர் சவுதி அரேபியாவிற்கு தனது முதல் பயணத்தை அரபு லீக் மாநாட்டுக்காக வந்தார்.

காசாவில் இஸ்ரேலிய இராணுவம் அதன் நடத்தைக்காக இஸ்லாமிய நாடுகள் "பயங்கரவாத அமைப்பாக" இஸ்ரேலை அறிவிக்க வேண்டும் என்று ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி கோரினார். இந்த மோதலுக்கு ஒரே தீர்வு பாலஸ்தீனிய அரசு "நதியில் இருந்து கடல் வரை" - அதாவது இஸ்ரேல் அரசை அகற்றுவது என்று ஈரானிய ஜனாதிபதி ரைசி உச்சிமாநாட்டில் கடுந்தொனியில் கூறினார்.







பாலஸ்தீனப் பகுதிகளில் என்ன நடக்கிறது என்பது குறித்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் தீர்க்கமான முடிவை எடுக்க விரும்புகிறோம். பொது மக்களைக் கொல்வதும், மருத்துவமனைகள் மீது குண்டு வீசுவதும் காசாவில் இஸ்ரேலிய குற்றங்களின் வெளிப்பாடுகள். இன்று, ஒவ்வொருவரும் தாங்கள் எந்தப் பக்கம் நிற்கிறார்கள் என்பதைத் தீர்மானிக்க வேண்டும், என்று ஈரானிய ஜனாதிபதி வேண்டினார்.

**சனியன்று (11.11.2023) முடிவுற்ற அரபு லீக் மாநாட்டில் வெளியிடப்பட்ட இறுதிப் பிரகடனத்தில், இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை நிறுத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில் ஒரு தீர்க்கமான மற்றும் கட்டுப்பாடான தீர்மானத்தை அறிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளது.**

அத்துடன் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக ஹேக்கில் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட வேண்டும் என அரபு லீக் மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

இஸ்ரேலின் அணுசக்தி வளர்ச்சிக்கு எதிராகவும் அல்ஜீரியா மற்றும் லெபனான் உட்பட சில நாடுகள் வலியுறுத்தின. இஸ்ரேலுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தவும் ஆயுத உதவி வழங்கவும் ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி அழைப்பு விடுத்தார்.





**இஸ்ரேலுக்கு பொருளாதார தடை:**

இஸ்ரேலுக்கு எதிராக பொருளாதாரத் தடைகள் மற்றும் ஆற்றல் புறக்கணிப்பும், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிற்கு கோரினர். சில அரபு லீக் நாடுகள் இஸ்ரேலுடன் கொண்டுள்ள பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகளை துண்டிப்பதன் மூலம் காசாவில் ஏற்பட்ட பேரழிவிற்கு பதிலடி கொடுக்க முன்மொழியப்பட்டது.

(16ம் பக்கம் பார்க்க)

# இலங்கை விஜயத்தை கலைஞர் கருணாநிதி கைவிட நிர்ப்பந்தித்த எதிர்ப்பு

பொன். வசந்த்



பிரதமர் சிறிமா பண்டாரநாயக்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது 22 ஜனவரி 1974 சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவரை முதலமைச்சர் கருணாநிதி வரவேற்ற காட்சி.

**'நாம் 200" நிகழ்வில் தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினின் காணொளிச்செய்தி ஒளிபரப்படாததை அடுத்து மூண்ட சர்ச்சையின் பின்புலத்தில் வரலாற்று ரீதியாக தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதில் இருந்த பிரச்சினைகள் குறித்து ஒரு பார்வை.**

இலங்கைத் தீவுக்கு இந்திய வம்சாவளி தமிழர்கள் வருகை தந்து 200 வருடங்கள் நிறைவுபெறுவதை நினைவுகூருமுகமாக கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "நாம் 200" நிகழ்வில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் செய்தி பதிவுசெய்யப்பட்ட காணொளி ஒளிபரப்பப்படாதமை குறித்து இம்மாத ஆரம்பத்தில் சர்ச்சை ஒன்று மூண்டது.

அந்த நிகழ்வில் இறுதி நேரத்திலேயே ஸ்டாலினின் செய்தி சேர்க்கப்பட்டதை இந்திய அரசாங்கம் ஆட்சேபித்ததன் காரணத்தினாலேயே அது ஒளிபரப்பப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டன.

வரலாற்று ரீதியாக எப்போதுமே தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் இலங்கையுடனான அவர்களின் உறவுகளைப் பொறுத்தவரை மிகவும் எச்சரிக்கையான பாதையிலேயே நடக்கவேண்டியிருந்திக்கிறது. இலங்கையில் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் சிக்கலான தன்மையே இதற்கு காரணமாகும். அதனால் தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் இலங்கைக்கு ஒருபோதுமே விஜயம் செய்யவில்லை என்பது தற்செயலானதல்ல.

**கலாசாரச் சுற்றுலா**

தமிழ்நாட்டு முதலமைச்சர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு திட்டமிட்டு பிறகு அதை ரத்துச் செய்த சம்பவத்தை நினைவுபடுத்துவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாக இருக்கும்.

1969 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அப்போதைய முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி சென்னைக்கு வருகைதந்திருந்த இலங்கை பத்திரிகையாளர் குழுவொன்றிடம் இலங்கையில் உள்ள தமிழ் அமைப்புக்களிடம் இருந்து கிடைக்கப்பபெற்ற அழைப்பை அடுத்து கலாசாரச் சுற்றுலா ஒன்றை 1970 ஜனவரியில் மேற்கொள்ளவிருப்பதாக தெரிவித்தார்.

அந்த விஜயத்துக்கு இலங்கை அரசியல் கட்சிகள் சிலவற்றிடமிருந்தும் பௌத்த தலைவர்களிடம் இருந்தும் உடனடியாகவே எதிர்ப்பு கிளம்பியது. கருணாநிதியின் விஜயம் இலங்கையில் அரசியல் நிலைவரத்தை சிக்கலாக்கும் என்றும் அந்த ஆண்டு நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த பொதுத்தேர்தலை பாதிக்கும் என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை பத்திரிகைகளில் இந்த விவகாரம் முக்கிய இடத்தைப் பிடித்தது. அத்துடன் அது குறித்து பாராளுமன்றத்திலும் பிரச்சினை கிளப்பப்பட்டது.

அதையடுத்து தனது விஜயம் தேர்தலைப் பாதிக்கும் என்று இலங்கை அரசாங்கம் உணருவதாக இருந்தால் அதை ரத்துச்செய்வதாக கருணாநிதி கூறினார். அவரின் விஜயம் பிறகு இடம்பெறவேயில்லை.

இலங்கையில் அத்தகைய எதிர்ப்புக்கு முகங்கொடுத்த திராவிட முன்னேற்ற கழகத்தின் முதல் தலைவர் கருணாநிதி அல்ல. இந்திய பெற்றோருக்கு இலங்கையில் பிறந்த நடிகரும் அரசியல்வாதியுமான எம்.ஜி. இராமச்சந்திரனும் 1965 ஆம் ஆணடில் இலங்கையில் நடைபெற்ற அழகுராணிப் போட்டியில் நடுவராக கலந்துகொள்வதற்கு நடிகை பி. சரோஜா தேவியுடன் சேர்ந்து விஜயம் செய்வதற்கு முன்னதாக எதிர்ப்புக்கு முகங் கொடுக்கவேண்டியிருந்தது.

ஆனால் அவரின் விஜயத்துக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியது என்றாலும் கடுமையான கண்காணிப்பை மேற்கொண்டது. அந்த விஜயத்தின்போது எம்.ஜி.ஆருக்கு தமிழர்களிடம் இருந்து மகத்தான வரவேற்பு கிடைத்தது.

**அண்ணாத்துரையின் தூதுவர்**

திராவிட முன்னேற்ற கழகம் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வந்த பிறகு கழகத்தின் தலைவர்களில் ஒருவரான சி.பி.சிற்றரசு 1967 ஜூலையில் இலங்கைக்கு விஜயம் செய்தபோது பாதுகாப்பு அமைச்சினதும் இராஜநந்திர நடைமுறைகள் பிரிவின் அனுமதியை அவர் பெறாவிட்டால் அவரைச் சந்திக்கப்போவதில்லை என்று அன்றைய எதிர்க்கட்சி தலைவர் சிறிமா பண்டாரநாயக்க மறுத்துவிட்டார்.

திராவிட முன்னேற்ற கழகத்தின் நோக்கங்கள் தொடர்பில் திருமதி பண்டாரநாயக்கவுக்கு இருந்திருக்கக்கூடிய தவறான அபிப்பிராயங்களை களையுமுகமாக சிற்றரசு தான் தமிழ்நாட்டு முதலமைச்சர் சி.என். அண்ணாத்துரையின் விசேட தூதுவராக வருகை தந்திருப்பதாக கூறிப்பார்த்தார்.

ஆனால், அந்த அம்மையாரோ இலங்கையில் திராவிட முன்னேற்றக்கழகத்தின் உள்நோக்கங்கள் குறித்து தனக்கு இருக்கும் அச்சத்தை ஒரு அண்ணாத்துரையினால் அல்ல பத்து அண்ணாத்துரையினாலும் கூட அகற்றமுடியாது என்று ஊடகங்களுக்கு கூறினார். தனது கருத்துக்களை இலங்கையில் உள்ள ஒவ்வொரு சிங்களவரும் ஏற்றுக்கொள்வார் என்பது நிச்சயம் என்றும் அவர் சொன்னார்.

திராவிட முன்னேற்ற கழகத்தைப் பற்றி சிங்களவர்களில் பெரும்பான்மையானோருக்கு இருக்கும் ஐயங்களே இந்த கடுமையான எதிர்ப்புக்கு காரணமாகும். இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களான தமிழர்களுக்கு கழகம் மிகவும் உறுதியாக ஆதரித்தது. 1956 ஆம் ஆண்டு கழகத்தின் பொதுச்சபை கூட்டத்தில் தனிச்சிங்கள கொள்கையை கண்டித்து தீர்மானம் ஒன்றை கருணாநிதி கொண்டுவந்தார். மலையக தமிழர்களில் கணிசமான எண்ணிக்கையானவர்களை இந்தியாவுக்கு திருப்பியனுப்புவதற்கு 1964 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தையும் திராவிட முன்னேற்ற கழகம் எதிர்த்தது.

அந்த நேரத்தில் "திராவிட நாடு" கோரிக்கையை திராவிட முன்னேற்ற கழகம் கைவிட்டிருந்தபோதிலும், அதை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களையும் தமிழ்நாட்டுடன் இணைத்து திராவிட நாட்டை உருவாக்கும் இலட்சியத்தைக் கொண்ட ஒரு பிரிவனைவாதக் கட்சியாகவே பெரும்பான்மைச் சிங்களவர்கள் கருதினார்கள் என்பது முக்கியமாக கவனிக்க வேண்டியதாகும்.

திராவிடர் கழக தாபகர "பெரியார்" ஈ.வெ. ராமசாமியின் கோட்பாடுகளினால் கவரப்பட்ட இலங்கை திராவிட முன்னேற்ற கழகம் அந்த நேரத்தில் இயங்கியதும் சந்தேகங்களுக்கு முக்கிய காரணமாகும். அந்த இயக்கத்துக்கு மலையக தமிழரான ஏ. இளஞ்செழியன் தலைவராக இருந்தார். இலங்கையின் தமிழ்பகுதிகளில் பிரிவினைக்காக பிரசாரங்களை முன்னெடுக்கக்கூடும் என்ற அச்சத்தில் இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தை அரசாங்கம் தடைசெய்தது.

அந்த கழகம் மலையக தமிழர்கள் இலங்கை குடியுரிமையை பெறுவதற்காகவும் சாதி மற்றும் மூடநம்பிக்கை ஒழிப்புக்காகவும் பாடுபட்டது என்று அரசியல் ஆய்வாளரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான பெ. முத்துலிங்கம் தனது "எழுதாத வரலாறு" என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார். இலங்கைத் தமிழர்கள் தங்களுக்கு என்று சொந்தத் தலைமைத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டுமேயன்றி தமிழ்நாட்டு தலைவர்களில் தங்கியிருக்கக்கூடாது என்ற உறுதியான நிலைப்பாட்டை இளஞ்செழியன் கொண்டிருந்தார். இருந்தாலும் இலங்கை திராவிட முன்னேற்ற கழகம் தமிழ்நாட்டு திராவிட முன்னேற்ற கழகத்துடன் தொடர்பைக் கொண்ட ஒரு பிரிவினைவாத கட்சியாகவே நோக்கப்பட்டது என்றும் முத்துலிங்கம் எழுதியிருக்கிறார்.

**உறுதிமொழிகள் பயன்தரவில்லை**

தாங்கள் ஒன்றிணைந்து இயங்கவில்லை என்று திராவிட முன்னேற்ற கழகமும் இலங்கை திராவிட முன்னேற்ற கழகமும் அளித்த உறுதிமொழிகள் பயன்தரவில்லை.

இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான தனது திட்டத்தை அறிவித்த வேளையில் கூட கருணாநிதி உலகின் வேறு எந்தப் பாகத்திலும் உள்ள எந்தவொரு தமிழ் அமைப்புடனும் திராவிட முன்னேற்ற கழகம் தொடர்பைக் கொண்டிருக்கவில்லை என்றும் தனது கழகம் இந்தியாவில் மாத்திரமே செயற்படுகிறது என்றும் கூறினார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக தான் பதவிக்கு வந்தது இலங்கையினதும் இந்தியாவினதும் நலன்களுக்கு ஒரு ஆபத்து என்று பம்பாயிலும் டில்லியிலும் கல்கத்தாவிலும் சில பத்திரிகைகள் எழுதியது குறித்தும் கருணாநிதி கவலை வெளியிட்டார்.

அந்த நேரத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தைப் பற்றி நிலவிய அச்சங்களை இந்தியாவில் இருக்கும் தமிழர்களையும் இலங்கையில் இருக்கும் தமிழர்களையும் ஒன்றாகச் சேர்த்துப்பார்த்து எண்ணிக்கையில் தங்களை உலகில் மிகவும் சிறுபான்மையினராக சிங்களவர்கள் கருதியதன் பின்னணியிலேயே நோக்கவேண்டும் என்று தமிழ் சோசலிச ஜனநாயகக் கட்சியின் தலைவரான திருநாவுக்கரசு சிறீதரன் கூறினார்.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 1978 டிசம்பரில் ஜப்பான் சுற்றுலாவுக்கு பிறகு இலங்கை வருவதற்கு திட்டமிட்டிருந்தார். ஆனால், இலங்கையையும் தமிழ்நாட்டின் பல பகுதிகளையும் சூறாவளி தாக்கி பெரும் அழிவுகளை ஏற்படுத்தயதை அடுத்து இலங்கை வருகையை அவர் தவிர்க்கவேண்டி யதாயிற்று.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தபோது 1953 ஆம் ஆண்டில் காமராஜர் இலங்கைக்கு ஒரு தடவை விஜயம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(தி இந்து)

# சவூதியில் அவசர அரபு லீக் மாநாடு:...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

**சவூதி தலைமையில் அரபு லீக் மாநாடு:**

காசாவில் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு பற்றி கலந்துரையாடும் நோக்கோடு அரபு நாட்டுத் தலைவர்கள் உச்சிமாநாட்டின் அவசர அமர்வொன்று நவம்பர் 11ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. அரபு லீக்கின் இந்த 32வது அமர்வு சவூதி அரேபியாவின் தலைமையிலேயே நடைபெற்றது.

சவூதி அரேபியா வாஷிங்டனுடனான நெருக்கமான உறவுகளை பேணுவதால், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் சவூதி அரேபியா தெரிவித்தது.

காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து வான்வழி மற்றும் தரைவழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. அகதிகள் முகாம், மருத்துவமனைகள் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி பல ஆயிரக்கணக்கான குழந்தைகள், பெண்கள், முதியோர்களை கொன்று குவித்து வருகிறது.

பாலஸ்தீன் மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என அரபு நாடுகள் உட்பட பல நாடுகள், ஐநா அமைப்பு, பல்வேறு மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இஸ்ரேல் அதை காதில் வாங்காமல் தாக்குதல்களை தொடர்ந்து வருகிறது.

இந்த நிலையில் போர் தொடர்பாக அரபு லீக் அவசர மாநாடு சவூதி அரேபியா தலைநகர் ரியாத்தில் நடைபெற்றது. கடந்த அக்டோபர் மாதம் 22 ஆம் தேதி எகிப்து தலைநகர் கெய்ரோவில் அரபு லீக் உச்சி மாநாடு முன்பு நடைபெற்றது.

**கெய்ரோ மாநாட்டின் பின் மீண்டும்!**

கெய்ரோ மாநாடு நடைபெற்றதை தொடர்ந்து 20 நாட்களுக்குப் பிறகு அரபு லீக் நாடுகள் மீண்டும் ஒன்றிணைவது குறிப்பிடத்தக்க விடயமாகும். மீண்டும் அரபு லீக் நாடுகள் இந்த அவசர கூட்டத்தில் கூட்டி இருப்பது சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்பட்டது.

கெய்ரோவில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போது இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் நிலவரம் பரபரப்பான விவாதமாக இருந்தது. ஈராக், சைப்ரஸ், ஜோர்டான், சவூதி அரேபியா, பஹ்ரைன், குவைத் மற்றும் கத்தார் ஆகிய நாடுகள் பங்கேற்றன. காசா பகுதியில் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு பற்றி கலந்துரையாடும் நோக்கோடு ஜேர்மனி மற்றும் ஜப்பானின் பிரதிநிதிகளுடன் ஐ.நா பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். கிரீஸ் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் பாலஸ்தீனியர்களின் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

சவூதி இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடனான தனது உரையாடலில், பாலஸ்தீன மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையிலும் மற்றும் அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வைக் காணும் வகையிலும் இராஜதந்திர முயற்சிகள் தொடர கோரியதாக இந்த மாநாட்டில் தெரிவித்தார்.

**சவூதி இராஜதந்திர முயற்சிகள்:**

போரை நிறுத்த பல வழிகளில் சவூதி முயற்சிகளை மேற் கொண்டுள்ளதாகவும், முன்னரே மேற்கொண்ட இராஜதந்திர முயற்சிகள் தொடர்பிலேயே தொடர்ந்தும் கரிசனையோடு இருப்பதாகவும் சவூதி அறிவித்தது.



சவூதி அரேபியாவின் பாதுகாப்பு அமைச்சர் காலித் பின் சல்மான், உடனடி போர் நிறுத்தத்தை கோருவதற்காக திங்கட்கிழமையன்று அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

சவுதி இளவரசர் முகமது பின் சல்மான், பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு ஆக்கிரமிப்பு இஸ்ரேலிய அதிகாரிகளே பொறுப்பு. ஆக்கிரமிப்பு, முற்றுகை மற்றும் குடியேற்றங்களை முடிவுக்குக் கொண்டுவருவதே இப்பிராந்தியத்தில் பாதுகாப்பு, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உத்தரவாதம் அளிக்க ஒரே வழி என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் எனக் கூறினார்.

காசா பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மனிதாபிமான உதவிகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. பாலஸ்தீன் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலான ராஜாங்க முயற்சிகளை சவூதி அரேபியா தொடர்ந்து மேற்கொண்டு உள்ளதாகவும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் சவூதி அரேபியா தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

பல்லாயிரம் உயிர்களை காவு வாங்கியிருக்கும் இப்போருக்கான ஒரு முடிவைப் பெறும் முயற்சியாக இம்மாநாடு அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் அரபு லீக் பிரதிநிதிகள் இஸ்ரேலுக்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்காமல், இறுதி அறிக்கையின் மீது ஒரு பொது உடன்பாட்டை எட்டத் தவறினர். இதற்கு முக்கிய காரணம் அரபு நாடுகளின் பிராந்திய விரிசல்களும், ஒற்றுமையின்மையும் முக்கிய காரணமாகும்.

